விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 193 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 15 சனிக்கிழமை (29.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# பெரமுனவில் போட்டியிட ரணிலுக்கு வாய்ப்பில்லை

## ராஜபக்ஷக்கள் பொறுமையிழந்துவிட்டனர்
## ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்படமாட்டாது என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் நடவடிக்கையால், ராஜபக்ஷவினர் பொறுமையின் எல்லையை எட்டியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## பெண்ணின் சங்கிலி அறுப்பு
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கோயில் குளம் பகுதியில் 15

## பறவைக் காய்ச்சல்
## நோயாளி ஒருவர் அடையாளம்

(கொழும்பு)

பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொற்று நோய்வைத்தியசாலை 15

## சீனத் துணை வெளியுறவு அமைச்சருடன் மகிந்த சந்திப்பு



15

## இனந்தெரியாத நபர்களால் சிறீதரன் எம்.பிக்கு அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரனுக்கு இனந்தெரியாத நபர்களால் அச்சுறுத்தும் வகையிலான சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தின் முன்பாக இனந்தெரியாத நபர்களின் அச்சுறுத்தும் வகையிலான நடமாட்டம் நேற்று அவதானிக்கப்பட்டுள்ளது.

இலக்கத்தகடுகள் மறைக்கப்பட்ட நான்கு மோட்டார் சைக்கிள்களில், முகமூடிகள் அணிந்தவாறு வருகைதந்த இனந் தெரியாத நபர்களின் நடமாட்டம், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனையும், அவரது குடும்பத் 15

## யுத்தத்தில் மாத்திரமின்றி அரசியலிலும் பொன்சேகா வெற்றியைப் பதிவு செய்வார்
### ஜனாதிபதி ரணில் புகழாரம்

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் சேவை இராணுவத் தளபதியாகவோ, பாராளுமன்ற உறுப்பினராகவோ முடிந்துவிடப் போவதில்லை. அவர் நாட்டுக்கு சேவையாற்றுவதற்கு இன்னும் வாய்ப்புக்கள் உள்ளன.

யுத்த களத்தில் மாத்திரமின்றி 15



## வடமராட்சி கிழக்கில்
## பாம்பு தீண்டியதில் குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு ஆழியவளை கொடுக்குளாயில், பாம்பு தீண்டியதில் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொடுக்குளாய் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான திருநாவுக்கரசு புனிதசோதி 15

## வெளிநாட்டிலிருந்து பணம் பெற்று
## யாழில் வன்முறைகளில் ஈடுபட்ட ஒருவர் கைது
### மேலும் ஐவருக்கு வலை வீச்சு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலிருந்து பணம் பெற்று யாழில் தொடர்ச்சியாக வன்முறைகளில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் ஐவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத் 15

## இலங்கை வருகிறார்
### அமெரிக்கப் பிரதிநிதி

(கொழும்பு)

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் ரொபேர்ட் கப்ரோத் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். 15

## நாட்டைக் கட்டியெழுப்பும் ஆற்றல் நம்மிடம் உள்ளது
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஆற்றலும் அறிவும் நம்மிடம் உள்ளது என்றும், அந்தப் பாதையில் நாம் தொடர்ந்து பய 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட பாரிய ஒன்லைன் நிதி மோசடி

## 137 இந்தியர்கள் கைது

பாரிய அளவிலான ஒன்லைன் நிதி மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட குழுவில் அங்கம் வகித்ததாகக் கூறப்படும் 137 இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள பல பகுதிகளில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் (CID) முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பில் 55 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 29 மடிக்கணினிகள் கைப்பற்றப்பட்டதோடு 55 சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கொச்சிக்கடையில், 53 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 31 மடிக்கணினிகள் மற்றும் 58 கையடக்கத் தொலைபேசிகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டை, மடிவெல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் 13 பேர் கைது செய்யப்பட்டு எட்டு மடிக்கணினிகள் மற்றும் 38 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டது.

அத்துடன், தலங்கம மற்றும் பத்தரமுல்லை பகுதியில் 16 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, எட்டு மடிக்கணினிகள் மற்றும் 38 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 137 இந்தியர்களிடம் இருந்து மொத்தம் 158 கையடக்கத் தொலைபேசிகள், 16 மடிக்கணினிகள் மற்றும் 60 டெஸ்க்டாப் கணினிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேகநபர்கள் சுற்றுலா விசாவில் நாட்டிற்கு வந்துள்ளதாகவும், இந்த இடங்களில் வாடகைக்கு எடுக்கப்பட்ட குடியிருப்புகளில் இருந்துகொண்டு சட்டவிரோதமான முறையில் ஒன்லைன் மோசடியில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ம-7,10)

## காலி சிறைச்சாலையில் தாக்கப்பட்ட கைதி மரணம்

காலி சிறைச்சாலையில் சக கைதிகளால் தாக்கப்பட்ட கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி பலகொட பிரதேசத்தை சேர்ந்த கைதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

இவர் பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் ஆவார்.

இந்த நிலையில் சிறையிலிருந்த சக ஊழியர்களால் தாக்கப்பட்ட இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,10)

## பெரமுனவில்...

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்டோரால் உருவாக்கப்பட்டுள்ள சர்வஜன அதிகாரம் என்ற அரசியல் கூட்டணி விரைவில் பொதுஜன பெரமுனவுடன் இணையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் இருக்கின்றனர்.

இந்த சூழலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உறவினரும் அவரது நெருங்கிய நண்பராகவும் கருதப்படும் உதயங்க வீரதுங்கவின் இந்தக் கருத்து அரசியலில் பரபரப்பாகியுள்ளது.

மகிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க, செஹான் சேமசிங்க, கஞ்சன விஜேசேகர உட்பட பொதுஜன பெரமுனவின் பல முக்கிய அமைச்சர்களும் சிரேஷ்ட தலைவர்களும் பல கட்சிகளுடன் இணைந்து விரைவில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கும் பொது கூட்டணியொன்றை உருவாக்கவும் நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் தெரியவருகிறது. (ம-7,10)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பிரதி அதிபர்
திரு. சி.திருபரன் அவர்களின்
அன்பு மாமனார்

**அமரர் பொன்னம்பலம் சண்முகநாதன்**

மலர்வு 19.18.1954 உதிர்வு 25.06.2024

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர்களின் துயரில் பங்குபற்றுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.


(118)

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

## சிவப்பேறு குறித்த அறிவித்தல்

### சிவத்திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(கப்பல் பொருள்வழிமுறை உத்தியோகத்தர், AMALIA II, Greece, மேலாளர்– யாழ் சண்முகநாதன் பதிப்பகம், ஓய்வுநிலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உத்தியோகத்தர், மேனாள் தலைவர் அரியாலை திருமகள் சனசமூக நிலையம், மேனாள் அரியாலை அருள்மிகு முத்து வைரவர் ஆலயத் தலைவர் )



சிவபூமியில் 09.08.1942 சிவபுரத்தில் 27.06.2024

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ் திருமகள் வீதி அரியாலை, கொழும்பு கொட்டாஞ்சேனை, சொயிசபுரம் மற்றும் கனடா ரொரன்ரோ ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்கள் 27-06-2024 வியாழக் கிழமை அன்று கனடாவில் சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி. தங்கம்மா சுப்பிரமணியம் (லக்ஷ்மி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பசுபதி, பார்வதி, கண்மணி, நாகம்மா மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலம்சென்ற செல்வி. திலகராணி மற்றும் திரு. தயாபரன் (கண்ணன் கனடா, உயர்தரம், 1991ம் அணி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, Bell Canada), கலாநிதி.மகேஸ்வரன் (ஈசன் கனடா, உயர்தரம், 1994ம் அணி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மொறட்டுவை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி. புஷ்பலதா, திருமதி. மாதுமையாள் ஆகியோரின் அன்பு மாமனாரும், அர்வின், அஷ்மிதா, டிலன், கவின, மொழி, ஷாரினி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1 எனும் முகவரியில் உள்ள மலர்ச்சாலையில் யூன் 30ம் திகதி ஞாயிற்றுகிழமை மாலை 5:00 முதல் 9:00 வரையும், யூலை 1ம் திகதி திங்கட்கிழமை காலை 8:00 முதல் 9:00 வரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு, தொடர்ந்து காலை 9:00 மணி முதல் 10:30 மணி வரை கிரியைகள் இடம்பெற்று, காலை 11:00 மணி அளவில் Highland Hills Crematorium, 12492 Woodbine Avenue, Gormley, ON L0H 1G0 எனும் முகவரியில் உள்ள இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
சிவத்திரு. சு.தயாபரன் (கண்ணன்) - 416 436 1985
[illegible]மகேஸ்வரன் (ஈசன்) - 905 616 9092

(C-0696)

உ
சிவாயநம



சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் பிரதம குரு
முத்தமிழ் குருமணி
**சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்**
அவர்களின்
சமய, சமூக தலைமைத்துவ, ஆன்மீக, பண்பாட்டு விழுமியங்களைப் பாராட்டி நடைபெறும்

## கௌரவிப்பும் பாராட்டு விழாவும்

நாள் : 30.06.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல்

இடம் : ஸ்ரீ கதிரமலைச்சிவன் கோவில் மண்டபம்

தலைமை
**திரு.மு.செல்வஸ்தான் அவர்கள்**
(அதிபர் - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

### நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| பிற்பகல் 2.30 மணி | : | சுன்னாகம் கரட்டியன் வைரவர் ஆலயத்தில் இருந்து விழா நாயகரை ஊர்வலமாக அழைத்து வரல் (இன்னிய, நாதஸ்வர இசைகளுடன்) |
| பிற்பகல் 3.15 மணி | : | மங்கள விளக்கேற்றல்<br>தேவாரம்<br>தமிழ்த்தாய் வாழ்த்து |
| பிற்பகல் 3.30 மணி | : | வரவேற்புரை<br>தலைமையுரை |
| பிற்பகல் 3.50 மணி | : | பாராட்டுரைகள் |
| பிற்பகல் 5.00 மணி | : | விழா நாயகர் கௌரவிப்பு |
| பிற்பகல் 5.30 மணி | : | ஏற்புரை<br>சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் |
| பிற்பகல் 5.50 மணி | : | நன்றியுரை |
| பிற்பகல் 6.00 மணி | : | இன்னிசை நிகழ்வு |

*தங்களை அன்புடன் அழைக்கின்றோம்*


சுபம்

ஆலய தொண்டர்கள், புலம்பெயர் ஆலய உறவுகளும்
சுன்னாகம் மக்கள் மன்றம் - பிரான்ஸ்

(1350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர்களுக்கும் வழங்கப்பட்ட ஓய்வூதியம்
# உண்மைகளை அம்பலப்படுத்திய கோபாகுழு




(கொழும்பு) சுமார் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட இறந்த ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

குறித்த விடயத்தை துணை கணக்காய்வாளர் ஜெனரல் எம்.எஸ்.நயன குமார கோபா குழுவில் தெரிவித்துள்ளார்.

இதன்படி, பிரதேச செயலக அலுவலகங்கள் மற்றும் ஓய்வூதிய திணைக்களத்தின் தவறான செயற்பாடுகளினால் இந்த முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், முப்படையினருக்கு அதிகளவான ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குழுவில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இறந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைச் செலவுகளுக்கும் அதிகளவில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சுமார் 6,400 சட்டவிரோத ஓய்வூதியங்கள் பதிவாகியுள்ளதாக கோபா குழு உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளது. (நி-6)

## ஹிருணிகா பிரேமசந்திரவுக்கு 3 வருட கடுழிய சிறைத்தண்டனை!



(கொழும்பு) கடத்தல் வழக்கில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 3 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

குறித்த வழக்கு தொடர்பான 18 குற்றச்சாட்டுகளின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது.

2016 டிசெம்பரில், தெமட்டகொட பிரதேசத்தில் தமது டிஃபென்டர் காரில் இளைஞர் ஒருவரை கடத்திச் சென்றதாக ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட சந்தேகநபர்கள் குழுவிற்கு எதிராக பொலிஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முறைப்பாடு செய்திருந்தனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்திருந்தார்.

அத்தோடு, சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திரவின் ஆதரவாளர்கள் 8 பேர் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சட்டமா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள சஞ்சய் ராஜரத்தின

(கொழும்பு) சட்டமா அதிபர் பதவியில் இருந்து தாம் தற்போது ஓய்வு பெற்றுள்ளதாக சஞ்சய் ராஜரத்தினம் அறிவித்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி அவருக்கு 60 வயதான நிலையிலேயே இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

முன்னதாக, அவரது சேவையை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கான ஜனாதிபதி ரணிலின் பரிந்துரை இரண்டு தடவைகள் அரசியலமைப்பு பேரவையினால் அங்கீகரிக்கப்படவில்லை.

இந்த மாத முற்பகுதியில் சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவையை நீடிப்பதற்கான ரணிலின் பரிந்துரையை பெரும்பான்மை வாக்குகளால் நிராகரிப்பட்டது. இதனையடுத்து அரசியலமைப்பு பேரவை கடந்த புதன் கிழமை மீண்டும் கூடி இந்த விடயத்தை மீள் பரிசீலனை செய்தது.

இதன்போது,60 வயதை எட்டியதன் பின்னர் சட்டமா அதிபருக்கான நீடிப்புக்கு அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் பேரவைக்கு இல்லை என தீர்மானிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தேர்தலுக்கு தயாராகுங்கள் தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு) தேர்தல் ஒன்று அறிவிக்கப்படவுள்ளதால், அதற்கு தயாராகுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தனது திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக அரசாங்க ஊடகப் பிரிவு அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி தேர்தல் செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரை நடைபெறும் என சமீபத்தில் தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது

இதன்படி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் கோரப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க அறிவித்தார்.

அவ்வாறானதொரு ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ணயித்தால் அதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக அரசாங்க ஊடகப் பிரிவு அதிகாரி கங்கானி லியனகே மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## சிறையிலுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

### மு.க.ஸ்டாலினுக்கு வெளிவிவகார அமைச்சர் கடிதம்





(டில்லி) இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்க தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கடிதம் மூலம் உறுதியளித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் "மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக முதல்வர் எழுதிய கடிதம் தனக்கு கிடைத்துள்ளதாகவும் 34 இந்திய மீனவர்கள் இலங்கையில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஆறு பேர் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரக அதிகாரிகள் துரிதமாக செயற்பட்டு, கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடந்த 10 ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்திய மீனவர்களின் நலன் மற்றும் பாதுகாப்புக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகவும் அதனைத் தொடர்ந்து செய்வோம் என உறுதியாக நம்பலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## ரஷ்யா-உக்ரைன் போரில் 17 இலங்கையர்கள் உயிரிழப்பு

(கொழும்பு) ரஷ்யா-உக்ரைன் போரில் இலங்கையைச் சேர்ந்த 17 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு உரிய இழப்பீடு வழங்குமாறு இலங்கை அரசாங்கம் ரஷ்யாவுக்கு அழைப்பு விடுத்துள்ளதாவும் குறிப்பிடப்படுகின்றது.

ரஷ்யா-உக்ரைன் இடையேயான போர் 2 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்தப்போரில் இரு தரப்பிலும் பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்களின் உயிர்கள் பறிபோயுள்ளன.

இந்நிலையில் குறித்த இரு நாடுகளும் வெளிநாடுகளிலிருந்து தமது நாட்டு இராணுவத்துக்கு ஆட்களைச் சேர்த்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிக சம்பளம், பாதுகாப்பு உதவியாளர் வேலைவாய்ப்பு என பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ரஷ்யா தனது இராணுவத்தில் ஆட்களை இணைத்து வருவதாக குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன.

அவ்வாறு சேர்க்கப்படும் நபர்களுக்கு வலுக்கட்டாயமாக போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களின் விருப்பத்திற்கு எதிராக போர் முனைக்கு அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

### அக்சர், குல்தீப் சுழல் மாயாஜாலம்

# நடப்பு சம்பியனை வீழ்த்தியது இந்தியா



ரி-20 உலக கிண்ண தொடரில் இங்கிலாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது இந்தியா. சுழலில் அக்சர், குல்தீப், அதகளப்படுத்தி இந்திய அணி 68 ரன்னில் வெற்றி பெற்றது.

வெஸ்ட் இண்டீசில் "ரி-20" உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் கயானாவில் நடந்த அரையிறுதியில் இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து அணிகள் மோதின. மழை காரணமாக ஒரு மணி நேரம், 20 நிமிடம் தாமதமாக போட்டி தொடங்கியது. "டொஸ்" வென்ற இங்கிலாந்து அணி கப்டன் பட்லர், பீல்டிங் தேர்வு செய்தார்.

இந்திய அணிக்கு கப்டன் ரோகித் சர்மா, கோலி ஜோடி மீண்டும் சுமாரான துவக்கம் தந்தது. கோலி (9) மீண்டும் ஏமாற்றினார். ரிஷாப் (4) ஏமாற்றினார். இந்திய அணி 8 ஓவரில் 65/2 ரன் எடுத்த போது, மழையால் போட்டி நிறுத்தப்பட்டது. ஒரு மணி நேரம், 17 தாமதமாக மீண்டும் ஆட்டம் தொடங்கியது.

கர்ரான் வீசிய 13 ஆவது ஓவரில் சிக்சர் அடித்த ரோகித், அரைசதம் கடந்தார். இதே ஓவரில் சூர்யகுமார், ஒரு சிக்சர், பவுண்டரி விளாச, 19 ரன் கிடைத்தன. ரஷித் சுழலில், ரோகித் (57) போல்டானார். சூர்யகுமார், 47 ரன் எடுத்து வீழ்ந்தார். ஆர்ச்சர் 18 ஆவது ஓவரை வீசினார். இதன் முதல் 3 பந்தில் 2, 6, 6 என 14 ரன் எடுத்த பாண்ட்யா (23), 4 ஆவது பந்தில் அவுட்டானார். 5 ஆவது பந்தில் துபே "டக்" அவுட்டானார். அக்சர் படேல் 10 ரன் எடுத்தார். இந்திய அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 171 ரன் எடுத்தது. ஜடேஜா (17), அர்ஷ்தீப் (1) அவுட்டாகாமல் இருந்தனர்.

இங்கிலாந்து அணிக்கு பட்லர், பில் சால்ட் ஜோடி சுமாரான தொடக்கம் கொடுத்தது. அக்சர் தனது முதல் ஓவரில் பட்லரை (23) அவுட்டாக்கினார். அடுத்த ஓவரில் பேர்ஸ்டோவை (0) போல்டாக்கிய அக்சர், மொயீன் அலியையும் (8) விட்டுவைக்கவில்லை. கர்ரான் (2), அபாயகரமான ஹாரி புரூக் (25) என இருவரையும் குல்தீப் வெளியேற்றினார். ஜோர்டான் (1), ரஷித் (2) என இருவரும் ரன் அவுட்டாகினர். கடைசியில் ஆர்ச்சர் (21) அவுட்டாக, இங்கிலாந்து அணி 16.4 ஓவரில் 103 ரன்னுக்கு ஓல் அவுட்டானது. இந்திய அணி 68 ரன்னில் வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (நி-6)

**மூன்றாவது முறை**

"ரி-20" உலக கிண்ண தொடரில் மூன்றாவது முறையாக பைனலுக்கு முன்னேறியது இந்தியா. முன்னதாக 2007 இல் கிண்ணம் வென்றது. 2014 இல் 2 ஆவது இடம் பெற்றது.

**பதிலடி**

கடந்த 2022, "ரி-20" உலகக்கிண்ண அரையிறுதியில் இந்தியா (168/6), 10 விக்கெட்டில் இங்கிலாந்திடம் (170/0) தோற்றது. நேற்றைய அரையிறுதியில் 68 ரன்னில் வெற்றி பெற்று, பதிலடி கொடுத்தது.

# நாக் அவுட் சுற்றில் அர்ஜென்டினா அசத்தல்

கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் "நாக் அவுட்" சுற்றுக்கு முன்னேறியது அர்ஜென்டினா. நேற்று நடந்த லீக் போட்டியில் சிலியை 1-0 என்ற கணக்கில் வீழ்த்தியது.

அமெரிக்காவில் "கோபா அமெரிக்கா" கால்பந்து தொடரின் 48 வது சீசன் நடக்கிறது. நேற்று நடந்த "ஏ" பிரிவு லீக் போட்டியில் நடப்பு சாம்பியன், உலகத் தரவரிசையில் "நம்பர்-1" ஆக உள்ள அர்ஜென்டினா அணி, 40 வது இடத்திலுள்ள சிலியை எதிர்கொண்டது.போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியில் 55வது நிமிடத்தில் சிலி வீரர் கேபிரியல், முரட்டு ஆட்டம் ஆட, "எல்லோ கார்டு" கிடைத்தது.

கேப்டன் மெஸ்சி, அனுபவ கொன்சாலஸ் உள்ளிட்ட பல முன்னணி வீரர்கள் இருந்த போதும், கோல் அடிக்க முடியாமல் போராடியது அர்ஜென்டினா அணி. 78 வது நிமிடம் ரோட்ரிகோ கொடுத்த பந்தில் கோல் அடிக்க முயன்றார் அர்ஜென்டினா வீரர் மார்டினஸ். இதை சிலி கோல் கீப்பர் கிளாடியோ பிராவோ தடுத்து நிறுத்தினார்.

போட்டி முடிய 2 நிமிடம் இருந்த போது, அர்ஜென்டினா அணி வீரர் மார்டினஸ், பந்தை வலது காலால் உதைத்து கோலாக மாற்றினார். முடிவில் அர்ஜென்டினா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

2 போட்டியிலும் வெற்றி பெற்ற அர்ஜென்டினா அணி 6 புள்ளியுடன் "நாக் அவுட்" சுற்றுக்கு முன்னேறியது. (நி-6)

# ரி-20 உலகக்கிண்ணம் இறுதியாட்டம் இன்று

கிரிக்கெட் ரசிகர்களை மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கி இருக்கும் 9 ஆவது ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சம்பியன் யார்? என்பதை நிர்ணயிக்கும் இறுதிப்போட்டியில் இந்தியா-தென் ஆபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன. இந்த ஆட்டம் பார்படாஸ் நகரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (நி-6)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலோக ஏற்றுமதிக்கு விசேட அனுமதி

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

எதிர்காலத்தில் உலோகங்களை ஏற்றுமதி செய்பவர்கள் கைத்தொழில் அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

உலோகம் தொடர்பான தொழில்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உலோகம், இரும்பு அது தொடர்பான உபகரணங்கள் மற்றும் பழைய பொருட்களை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்வதை தடுக்கும் நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை உலோகக் கழிவுகள், இரும்பு தொடர்பான உபகரணங்கள் மற்றும் செம்பு, பித்தளை, அலுமினியம், சீனாவேர் மற்றும் வெள்ளை இரும்பு போன்ற குப்பைப் பொருட்கள் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அங்கு, அனுமதிக்கப்பட்டுள்ள உலோகம் தொடர்பான ஏற்றுமதிகள் மற்றும் ஏற்றுமதி நிலைமைகளுக்கு ஏற்ற பொருட்களை அடையாளம் காணும் வகையில் எதிர் வரும் காலங்களில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் அனைத்து சட்டவிரோத மீள் ஏற்றுமதிகளும் நிறுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# ஆசிரியர் சேவையை அத்தியாவசியச் சேவையாக அறிவிக்க முடியாது- சட்டபீட பேராசிரியர்

(கொழும்பு)

ஆசிரியர் சேவையை அத்தியாவசியச் சேவையாகப் பிரகடனப்படுத்த முடியாது என கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடப் பேராசிரியர் ஏ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பணிப்புறக்கணிப்பு தொடருமாக இருந்தால் ஆசிரியர் சேவையை அத்தியாவசியச் சேவையாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்த விடயம் தொடர்பிலான சட்ட விளக்கத்தை தெரிவித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-6)

# கடன் மறுசீரமைப்பு விவாதம்

## பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைப்பு

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் மீதான விவாதம் ஜூலை 2 மற்றும் 3 ஆகிய திகதிகளில் பாராளுமன்றத்தில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, பாராளுமன்றத்தின் விசேட கூட்டம் ஜூலை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கும் ஜூலை 3 ஆம் திகதி மாலை வாக்குப்பதிவும் நடைபெறவுள்ளது.

பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க, பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 16 ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கு இணங்க இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் வருகை தந்து பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார். (நி-6)

# பேருந்து கட்டணத்தில் மாற்றம்

## பேருந்து உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

பேருந்து பயணிகளுக்கான கட்டணத்தை ஐந்து வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் கெமுனு விஜேசிங்க நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனை அறிவித்துள்ளார். அதன்படி, குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் ரூபாய் 28 ஆகக் குறைக்கப்படும் என்றும் இந்தக் கட்டண திருத்தம் ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# பச்சை மிளகாயில் சுவையான ஐஸ்கிரீம்

(கொழும்பு)

இலங்கையில் வெலிமட பிரதேசத்தில் பச்சை மிளகாயைக் கொண்டு ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஓரளவு பழுத்த பச்சை மிளகாய்களை கொண்டு இவ்வாறு ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஊவாவெல்லஸ்ஸபல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப உதவியை பெற்றுக் கொண்டு பச்சை மிளகாய் ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வெலிமட பிரதேசத்தைச் சேர்ந்த ருவான் லங்காதிலக்க என்ற நபர் இவ்வாறு செய்துள்ளார்.

கொழும்பு 7 ஹெக்டர் கோபப்படுவ விவசாய விவகார மற்றும் ஆய்வுப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ருவான் லங்கா திலக்க தனது இந்த ஐஸ்கிரீம் உற்பத்தியை விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் அறிமுகம் செய்துள்ளார்.

கல்கிரியாகம மற்றும் வருணியா ஆகிய பச்சை மிளகாய் வகைகள் இரண்டையும் ஒன்றிணைத்து கலப்புப் பச்சை மிளகாய் வகை ஒன்று உருவாக்கப்பட்டு ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மாட்டுப் பால், சீனி மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றை பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய உற்பத்திக்கான காப்புரிமையை பெற்றுக் கொள்ள விண்ணப்பம் செய்துள்ளதாகவும் சிறிய யோகட் கப் அளவிலான ஐஸ் கிரீம் ஒன்றை 100 ரூபாய்க்கு விற்பனை செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார். (நி-6)

# பரிசில் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

புலோலி மந்திகை வில்லிபாதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவினை முன்னிட்டு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மொழியறிவு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், பங்கு பற்றிய மாணவர்களுக்குமான பரிசுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று ஆலய தீர்த்தோற்சவம் இடம் பெற்றதைத் தொடர்ந்து மதியம் 12.30 மணிக்கு வழங்கி வைக்கப்படவுள்ளது. (நி-6)

# நாடக விழா

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக விழா ஜூலை மாதம் முதலாம் திகதி மாலை 6 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் செல்லையா இளங்கோ தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக செயல்திறன் அரங்க இயக்க இயக்குநர் கலாநிதி தேவநாயகம் தேவானந்த், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பஞ்சாட்சரம் கணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# இராசிபலன்

29.06.2024
ஆனி 15, சனிக்கிழமை
அட்டமி பிற்பகல் 4.02 மணிவரை
உத்தரட்டாதி முற்பகல் 10.52மணிவரை

சுபநேரம் -2.56-4.26 மணிவரை
இராகு காலம்-8.56-10.26 மணிவரை

சந்திராஷ்டமம்.
ஆயில்யம்,மகம்.

வளவன்

**மேஷம்** – தொழில் ரீதியான பயணங்கள் கைகூடும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** – ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் திருப்தி காணும் நாள், உடல் நலன் சீராகும்.

**துலாம்** – சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், ஆரோக்கியத்தில முன்னேற்றமுண்டு.

**மகரம்** – சகோதர ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், வழிபாடு சிறப்பினைத் தரும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், புதிய பெருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்** – சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** – பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** – நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பணப்புளக்கம் கூடும் நாள்.

**மிதுனம்** – நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** – தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**தனுசு** – திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**மீனம்** – எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக உழைக்கின்ற எந்த மனிதனும் ஏழ்மையை அடைவதில்லை.

# நாய் கடித்தால் தாமதிக்காது சிகிச்சை பெறுங்கள்

## கிளி.மாவட்ட தொற்று நோய் வைத்தியர்

(முறிகண்டி)

**விசர்நாய்க் கடிகளால் ஏற்படும் உயிரிழப்புக்களை தடுக்க வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்துகளை ஒழுங்காக போட வேண்டும் இதன் மூலம் விசர் நாய்கடி இறப்புக்களை தடுக்க முடியும் என கிளிநொச்சி மாவட்ட தொற்றுநோய் மருத்துவர் க.ரஞ்சன் தெரிவித்துள்ளார்**

நீர் வெறுப்பு நோய் என சந்தேகிக்கப்படும் நிலையில் 4 வயதான சிறுமி கடந்த புதன் கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்நிலையில் இது தொடர்பில் நேற்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நீர்வெறுப்பு நோயானது நாய், பூனை போன்ற பாலூட்டும் விலங்குகளால் எமக்கு தொற்றக் கூடிய ஒரு நோயாகும். கடி மற்றும் கீறல் மூலம் நோய் வெறுப்பு நோய்த்தாக்கத்துக்கு உள்ளாவதுடன் ஒருவர் மிக விரைவாக மரணிக்கக் கூடும்.

இவ்வாறு விலங்கினால் கடியுறுகின்ற போது, கிளிநொச்சி மாவட்டத்தில் 6 மருத்துவமனைகளில் ARV தடுப்பூசியினையும், ARS தடுப்பூசியினையும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

பளை, தருமபுரம், பூநகரி, முழங்காவில், அக்கராயன் மற்றும் கிளிநொச்சி மருத்துவமனையிலும் ARV தடுப்பூசி வழங்கப்படுவதுடன், ARS என்கின்ற விசேட தடுப்பு மருந்தினை கிளிநொச்சி மருத்துவமனையிலும் பெற்றுக்கொள்ள முடியும். சிறுமியின் இறப்பின் மாதிரிகளை நேற்று முன்தினம் 10 மணியளவில் யாழ். போதனா மருத்துவமனையிலிருந்து கொழும்புக்கு அனுப்பியுள்ளோம். மாதிரி வந்த பின்னரே இது நீர்வெறுப்பு நோயா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

அதுவரையான காலப்பகுதியில் முற்காப்பு நடவடிக்கையாக குறித்த சிறுமியின் வீட்டுக்கு சென்று உறவினர்கள் மற்றும் கடியுற்றவர்களுக்கும் தடுப்பு மருந்துகளை ஏற்றியுள்ளதுடன் அப்பிரதேசத்தில் உள்ள நாய்களிற்கு தடுப்பு ஊசிகளை ஏற்றியுள்ளோம். அதேவேளை ஏனைய பகுதிகளில் அடுத்த வாரம் இதனை முன்னெடுத்துள்ளோம்.

ஒரு கடி ஒன்று நிகழும் போது அடுத்த 10 நிமிடங்களிற்குள் பெறாடின் அல்லது சவர்க்காரம் கொண்டு அந்த பகுதியை நன்றாகக் கழுவ வேண்டும். பின் அருகில் உள்ள ஏதாவது ஒரு மருத்துவமனையில் ARV ஊசியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏனைய தடுப்பூசிகள் ARV தடுப்பூசிக்கு இணையானது இல்லை. இந்த நோய்க்கு 4 ஊசிகளை இரண்டு கைகளிலும் போட வேண்டும். கடி காயம் பாரதூரமாக இருந்தால் மேலதிகமாக ARS ஊசியையும் முழுமையாக பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (நி-6-100-316)

## ‘சீல்’ வைக்கப்பட்ட உணவகம்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மட பகுதியில் இயங்கி வந்த உணவகம் ஒன்றிற்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் உரிமையாளருக்கு 54 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வெதுப்பக உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று அவருக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

சுன்னாகம் , மருதனார் மடம் மற்றும் இணுவில் பகுதிகளில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் அப்பகுதிப் பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது உணவகம் ஒன்றும் வெதுப்பகம் ஒன்றும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது உரிமையாளர்கள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர்களை கடுமையாக எச்சரித்து வெதுப்பக உரிமையாளருக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டம் விதித்த மன்று உணவக உரிமையாளருக்கு 54 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன் உணவகத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத்திற்கு சீல் வைக்குமாறு உத்தரவிட்டது.(நி-6-33)

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் குறித்த மன்றத்தின் தலைவர் திருமதி. அருண்ராஜன் சனுஜா தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-6)

## மிக்ஸருக்குள் பல்லி; ரூ.15 ஆயிரம் தண்டம்

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி ஆலய சூழலில் விற்கப்பட்ட மிக்ஸருக்குள் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டமை தொடர்பில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் மிக்ஸரை விற்பனை செய்த நபருக்கு 15 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, மிக்ஸரை விற்பனை செய்த நபரை கடுமையாக எச்சரித்த மன்று அவருக்கு 15 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (நி-6-33)

## தென்தீபம் - இதழ் 8 ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையினால் ஆவணப்படுத்தும் வகையிலமைந்து வெளியிடப்படவுள்ள தென்தீபம்-இதழ் 8 இற்கான ஆக்கங்கள் வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் கல்விப்புலம் சார்ந்தவர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் வேலணைப் பிரதேச செயலக உத்தியோகத்தர் மற்றும் வேலணைப் பிரதேசத்திலுள்ள அரச சேவை அலுவலக உத்தியோகத்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

வேலணைப் பிரதேசத்தின் கலை, கலாசாரம், வரலாறு, சமூகவாழ்வியல், தொல்லியல் மரபுரிமை, கிராம நாமங்கள் நாட்டுப்புறவியல், ஆன்மிகம் போன்ற பண்பாட்டம்சங்களை பிரதிபலிக்கும் வகையிலான ஆய்வுக்கட்டுரைகள், கவிதை சிறுகதை, ஆவணத்தரவுகள் நேர்காணல், பல்சுவை அம்சங்கள் போன்ற ஆக்கங்களை வழங்க முடியும்.

ஆக்கங்களை வழங்க விரும்புவோர் எதிர்வரும் 15.07.2024 இற்கு முன்னர் வேலணை பிரதேச கலாசாரப் பிரிவில் வழங்குமாறும் அல்லது தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் வேலணை அல்லது செயலாளர், வேலணை பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். கிடைக்கப் பெறும் ஆக்கங்கள் கலாசாரப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக தென்தீபம்-இதழ் 8 இல் உள்ளடக்கப்படுமெனவும் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் தொடர்பிலான பொறுப்புக்கள் அனைத்தும் படைப்பாளியையே சாரும் என்பதனை உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும் எனவும் தீவுகள் தெற்கு வேலணை பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான க.சிவகரன் அறிவித்துள்ளார். (நி-6)

## கடற்படை வீரரின் இறுதி நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர்

(யாழ்ப்பாணம் )

நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கையின் போது உயிரிழந்த கடற்படை வீரரின் இறுதிக் கிரியைகளில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அதேவேளை யாழ்.மாவட்டத்தில் இருந்து கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உயிரிழந்த கடற்படை வீரருக்கு அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-6-33)

## ‘கலைஞானச்சுடர் விருது’ விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தினால் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் கலைஞர்களிடம் இருந்து 2024 ஆம் ஆண்டுக்கான கலைஞானச்சுடர் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட கலை இலக்கியத்துறையில் பங்களிப்புச் செய்த கலைஞர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 08.07.2024 ஆகும். விண்ணப்பங்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (நி-6)



யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை யாழ். இ.போ.ச பேருந்து நிலையத்தில் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி விவேகானந்தவிற்கு ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருது

(அக்கராயன்)

கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயம் 2024 ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதினை பெற்றுக்கொண் டது.

குறித்த விருதினை இவ் வாண்டு பெற்றுக்கொண்ட ஒரே யொரு தமிழ் பாடசாலையாக அம்பாள்குளம் விவேகானந்த வித்தியாலயம் காணப்படுகிறது.



கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்ட பத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பாடசாலைகள், நிறுவனங்கள், அமைப்புக்கள் என 902 பேர் விண்ணப்பத்திருந்த நிலையில் கிளிநொச்சி விவேகானந்த வித்தி யாலயம் அவற்றுக்குள் தெரிவு செய் யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே குறித்த பாடசாலை சுற்று சூழல் அமைச்சின் இரண்டு சுற்றுச் சூழல் விருதினை பெற்றுள்ளதோடு, சுற்றுச் சூழல் தகவல் நிலையத்தினை யும் பாடசாலை மட்டத்தில் பெற்றுக் கொண்ட ஒரு பாடசாலையாக காணப்படு கின்றதுடன் 2011 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்ட குறித்த பாடசாலை மிக குறுகிய காலத்திற்குள் கல்வி மற்றும் இணைபாட செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் தேசிய மட்டத்தில் சாதனை புரியும் அளவில் வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-6-350)

# பரமேஸ்வராக் கல்லூரி

## பழைய மாணவர்சங்க பொதுக்கூட்டம்

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் பொதுக்கூட்டம் 30.06.2024 நாளை காலை 9.30 மணியளவில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் (Y.M.H.A) ஆரம்பமாகி நடைபெறும். அன்று புதிய ஆண்டுக்கான 2024/2025 நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெறும். அங்கு படித்தவர்கள் சங்கத்தில் சேராதிருந்தால் அன்று வந்து சேர்ந்து பதியலாம். மதியச் சாப்பாட்டுடன் கூட்டம் நிறைவுபெறும்.

**சட்டத்தரணி கனக நமநாதன்**
**தற்காலிக தலைவர்**

(1349)

# குருபூசை

(யாழ்ப்பாணம்)

செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் நல்லூர் தெற்கு வீதியிலுள்ள சுவாமிகளின் நினை வாலயத்தில் குருபூசை இடம்பெற்று தொடர்ந்து இணுவில் சோ.பரமசாமி எழுதிய "குரு வழி நடந்த குணவான்" என்ற நூலின் மீள் பதிப்பு வெளியீடு இடம்பெறவுள்ளதுடன் அன்றைய தினம் நிகழ்வில் கலந்துகொள்பவர்களுக்கு மானிய அடிப்படையில் சில நூல்கள் வழங்கப்படவுள்ளது. (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956156719**

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18, கொழும்புத்துறை வீதி. 581/20 என்னும்வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை இல-02, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யுவக்கீம்பிள்ளை டொமினிக் என்ற யுவக்கீம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் அவர்கள் 19.03.1979ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.மரியாம்பிள்ளை முகதாவில் 412ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம், இல-24/4, மத்திய கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவிரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் ஹெலனுக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல-25/2, மத்திய கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி. றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் அவர்கள் 15.01.2004ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு A. இராஜரட்ணம் முகதாவில் 2015ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம், தனது பெற்றோரான சவிரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் ஹெலனும் மரணிக்க ஏகவாரிசான தனக்குரித்தானதும், தனதாட்சியுமானதென வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை இல-25/2, மத்திய கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த (தற்காலம் பிரான்ஸ்) றிச்சேட் கான்ஸ்போவர் தனது அற்றோணி திருமதி. எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் மூலமும், திருமதி றிச்சேட்கான்ஸ்போவர் எலிசபேத் குயினும் 27.10.2014ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி. ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 2213ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தமது பெறாமகளான இல-18/8, மத்திய கிழக்கு வீதி, குருநகரைச் சேர்ந்த சாந்தகுமார் நிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், குருநகர், புதியகடற்கரை வீதி, இல-93 ஐச் சேர்ந்த சாந்தகுமார் நிறோசனும் பெண் விதுஸ்ரா றெனுசியாவும் 15.09.2015ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் 187ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் குருநகர், மத்திய கிழக்கு வீதி, இல-10/1 ஐச் சேர்ந்த கபிரியேல்பிள்ளை கிறிஸ்தோப்பர் மற்றும் கிறிஸ்தோப்பர் பெண் றெஜினா ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை குருநகர், மத்திய கிழக்கு வீதி, இல-10/1 ஐச் சேர்ந்த கபிரியேல்பிள்ளை கிறிஸ்தோப்பரும், கிறிஸ்தோப்பர் பெண் றெஜினாவும் 20.05.2022ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி. இளங்கீரன் முகதாவில் 14618ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் அதே முகவரி இல-12 ஐச் சேர்ந்த செல்வி. யூலி பிரகாசராசாவுக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாணம் மாநகர சபை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு-J/61. கொழும்புத்துறை இறை: "அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்" என்று வழங்கும் "கொழம்புத்துறை- தெருத்தோட்டம்" விஸ்தீரணம் நிலப்பரப்பு 6. இதனை உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.கனகசபை அவர்கள் 14.06.2020ஆம் திகதியில் 1-6 துண்டுகளாக பிரிவிட்டுத் தயாரித்த 6088A-91/14ம் இலக்க நிலஅளவைப்படத்தின்படியும் விஸ்தீரணம் நிலப்பரப்பு 6. இதில் குறித்த 6088A-91/14ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு-01 எனச்சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு (1) ஒன்றும், வான்பயிர் செய்பயிர்களும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லைகள்:-

கிழக்கு - குறித்த 6088A-91/14ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு-02 எனச்சுட்டப்பட்ட பாகம்.

வடக்கு ஆறு மீற்றர் அகலமான பாதை

மேற்கு - ஆறு மீற்றர் அகலமான பாதை

தெற்கு - குறித்த அளவையாளரின் 6088/A/14ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 92 என சுட்டப்பட்ட பாகம். இதடங்களும்.

இன்னும், வடக்கே உள்ள ஆறு மீற்றர் அகலமான பாதையால் பிரதான வீதிக்கு போக்குவரத்து செய்வதற்கான பாதை பாவிப்புரித்தும்.

தற்போது செல்வி. யூலி பிரகாசராசா இவ்வாதனத்தைத் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வி யூலி பிரகாசராசா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ்.மாநகர சபை.**

(சி-693)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா:34
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Civil Engineering, விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்
தொ.இ: B/7712

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரேவதி
1 இல் செவ்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Bsc. Engineer
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/11264

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 28
சூரி செவ் 9 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Bsc, திட்டமிடல்
எதிர்பார்ப்பு: Engineer,Doctor, Accountant
தொ.இ: B/12925

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 62 3/4
7 இல் செவ்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: BA பட்டதாரி, Do
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்
தொ.இ: G/5885

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
2 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc,Civill Engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/7031

பிறப்பு- 1993 இந்து
நட்சத்திரம்: சதயம்
2 இல் செவ்
கி.பா: 27 3/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS,Doctor
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/12918

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# கர்நாடகாவில் 13 பேரின் உயிரை காவு கொண்ட கோர விபத்து!

**(டில்லி) கர்நாடகாவில், லொறியொன்றுடன் பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு குழந்தைகள் உட்பட 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.மேலும் 4 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.**



கர்நாடக மாநிலம், காவேரி மாவட்டத்தில் நேற்று அதிகாலை 4 மணியளவில், புனே-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, வீதியில் நின்று கொண்டிருந்த லொறியொன்றின் மீது அரை சொகுசு பேருந்து ஒன்று பயங்கரமாக மோதியதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மருத்துவக் குழுவினரும், தீயணைப்பு வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பேருந்தின் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே, இந்த விபத்துக்கான காரணம் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி-6)

## ‘கூகுள் மேப்’ உதவியுடன் சென்ற கார் ஆற்றுக்குள் பாய்ந்தது



(டில்லி)

கூகுள் மேப் என்பது புவியியல் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் ஆகும். ஒரு இடத்தில் இருந்து வெறோடு இடத்திற்கு வாகனங்களில் பயணிப்பவர்கள், சரியான இடத்திற்கு செல்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என்றால் மறுப்பதற்கில்லை.

செல்லவேண்டிய இடத்திற்கு செல்லும் சாலை உள்ளிட்ட அனைத்தையும் “கூகுள் மேப்” காண்பித்து விடுவதால், தெரியாத இடத்திற்கு கூட எளிதாக சென்று விட முடிகிறது.

இருந்தபோதிலும் சில நேரங்களில் “கூகுள் மேப்” தவறான வழியை காண்பித்து விடுவதால் பலர் சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள். அதுபோன்ற ஒரு சம்பவம் கேரளாவில் நடந்திருக்கிறது. கேரள மாநிலம் காசர்கோடு மாவட்டம் கண்ணங்காடு பகுதியை சேர்ந்தவர்கள் அப்துல் ரஷீத் (வயது35), தஷ்ரீப்(36).

சம்பவத்தன்று இவர்கள் இருவரும் கர்நாடக மாநிலம் உப்பினங்கியில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு காரில் சென்றனர். அவர்கள் “கூகுள் மேப்” உதவியுடன், அது காட்டிய வழியை பின்பற்றி காரில் சென்றனர்.

குட்டிகோல் பல்லாஞ்சி ஆற்றின் பாலம் வழியாக அவர்கள் சென்றனர். அப்போது அவர்களது கார் ஆற்றுக்குள் “கூகுள் மேப்” புதிதாக கட்டப்பட்டிருந்த பாலத்தை காட்டாமல், பழைய பாலத்தை காட்டியிருக்கிறது. அதனை பின்பற்றி அப்துல் ரஷீத், தஷ்ரீப் ஆகியோர் காரில் சென்றனர்.

அவர்கள் சென்ற பழைய பாலத்தில் தடுப்புகள் இல்லாதது இருட்டில் தெரியவில்லை. இதனால் அவர்களது கார் ஆற்று வெள்ளத்தில் சிக்கியது. அவர்களுடைய கார் சுமார் 150 மீற்றர் தூரம் வரை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

சிறிது தூரத்தில் ஆற்றுக்குள் இருந்த செடிகளில் அவர்களது கார் சிக்கி நின்றது. இதையடுத்து அப்துல் ரஷீத், தஷ்ரீப் ஆகி இருவரும் காரின் பக்கவாட்டு ஜன்னல் வழியாக வெளியே வந்தனர்.

தங்களது கார் ஆற்று வெள்ளத்தில் சிக்கியது குறித்து தங்களின் உறவினர்களுக்கு போனில் தகவல் தெரிவித்தனர். அவர்கள் அதுபற்றி தீயணைப்பு நிலையத்துக்கும் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு வந்து வெள்ளத்தில் சிக்கியிருந்த அப்துல் ரஷீத், தஷ்ரீப் ஆகிய இருவரையும் பொதுமக்கள் உதவியுடன் மீட்டனர்.

மேலும் அவர்களது காரை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட கார், ஆற்றின் நடுவே இருந்த செடியில் சிக்கி நின்றதால் அப்துல் ரஷீத், தஷ்ரீப் ஆகியோர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## டில்லி சர்வதேச விமான நிலையத்தில் விபத்து-3 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவின் டில்லி சர்வதேச விமான நிலையத்தின் முதல் முனையத்தின் மேற்கூரையின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் 3 பேர் உயிரிழந்ததாகவும், 6 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை பெய்த பலத்த மழை மற்றும் காற்றின் வேகம் காரணமாக கட்டடத்தின் மேற்கூரையின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததுள்ளதுடன் பல தனியார் வாகனங்களும்சேதமடைந்துள்ளன.

இந்த சம்பவத்தையடுத்து, விமான நிலைய முதல் முனையத்தில் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்டவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா என்பதை கண்டறியும் பணியை நிவாரண குழுக்கள் ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பெரு நாட்டை உலுக்கிய நிலநடுக்கம் விடுக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கை

(பெரு)

தென் அமெரிக்க நாடான பெருவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. ரிக்டரில் இந்த நிலநடுக்கம் 7.2 ஆக பதிவாகி இருக்கிறது.

நிலநடுக்கம் காரணமாக அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது. இதனால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தின் போது பதிவான சிசிடிவி காட்சி அடங்கிய வீடியோ சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது. வீடியோவில் தெருவில் நிறுத்தி வைக்கப்பட்ட கார் பூமியோடு சேர்ந்து குலுங்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இதே போன்று வீட்டினுள் இருந்த மின்விளக்குகள் நிலநடுக்கத்தால் குலுங்கின. இது தொடர்பான வீடியோ வெளியாகி உள்ளது.


காராவெலியிலே ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக மலையில் இருந்த பாறைகள் சரிந்து பான்-அமெரிக்க நெடுஞ்சாலையில் விழுந்தன. இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. (நி-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## மறக்க முடியாத ஆடம்பர திருமணம்

### வைரலாகும் வீடியோ



(பீஜிங்)


யதார்த்தம் ஒருபோதும் புனைகதைக்கு போட்டியாக முடியாது என்று சொல்வார் கள். ஆனால் நிஜ வாழ்க்கையில் "கிரேஸி ரிச் ஏசியன்ஸ்" பட பாணியிலான திருமண வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

டானாவாங் என்பவர் இன்ஸ்டாகிராமில் மிகவும் பிரமாண்டமாக நடத்தப்பட்டுள்ள திருமணத்தின் வீடியோவை பகிர்ந்துள்ளார். அதில் சுவாரசியம் என்னவென்றால், மணமக்கள், தங்கள் திருமணத்திற்கு வரும் விருந்தினர்களுக்கு வாழ்நாள் முழுவதும் நினைவில் வைக்கும் படியான மறக்க முடியாத அனுபவத்தை அளித்துள்ளனர்.

அதாவது, விருந்தினர்கள் அனைவரும் சீனாவில் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் 5 நாட்கள் தங்குவதற்கும், அவர்கள் வெளியே சுற்றிப் பார்க்க ரோல்ஸ் ராய்ஸ் கார்களை ஏற்பாடு செய்திருந்தனர். இதுபோக திருமணத்திற்குவருகை வந்தவர்களுக்கு ரூபாய் 66,000 பணம் நிரப்பிய சிவப்பு பெட்டியும் அளித்தனர். மேலும் விருந்தினர்கள் அவரவர் ஊர்களுக்கு தேவையான விமான டிக்கெட் தரப்பட்டு இருந்தது.இவ்வளவு பரிசையும் அளித்த தம்பதிகள், விருந்தினர் களிடம் இருந்து எதையும் பெற வில்லை.

இதுதொடர்பான வீடியோ 4 லட்சத்திற்கும் அதிகமான பார்வைகளைப் பெற்றுள்ளது. வீடியோவை பார்த்த பயனர்கள் பலரும் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அதில் பெரும்பாலானவர்கள், இது இந்த ஆண்டின் மிகவும் ஆடம்பரமான திருமணமா என்று ஆச்சரியத் துடன் கேட்டுள்ளனர். (நி-6)

## சுனித்தா வில்லியம்ஸ் பூமிக்குத் திரும்புவதில் தாமதம்



(வோஷிங்டன்)

விண்வெளி வீராங்கனை சுனித்தா வில்லியம்ஸ் பூமிக்கு திரும்புவது மீண்டும் தாமதமடைந்துள்ளது.

சுனித்தா வில்லியம்ஸ் விண்வெளிக்கு பயணித்த பொயிங் ஸ்டார் லைனர் விண்வெளி ஓடம் தொடர்ச்சியான தொழில்நுட்ப கோளாரினால் பாதிக்கப்பட்டுள்ளதனால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.


இம்மாதம் 5 ஆம் திகதி விண்வெளிக்கு பயணித்திருந்த சுனித்தா வில்லியம்ஸ் 14 ஆம் திகதி பூமிக்கு மீள திரும்பவதற்கு திட்டமிடப்படப்பட்டிருந்தது.

எனினும் அவர் பயணித்த விண்வெளி ஓடம் தொழில்நுட்பக்ள கோளாரினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், அவரால் உரிய திகதியில் பூமிக்கு திரும்ப முடியாமல் போனது.

இந்த நிலையில், சுனித்தா வில்லியம்ஸ் மீண்டும் பூமிக்கு திரும்பும் திகதியை நாசா வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## புகையிரதம்- பேருந்து மோதி விபத்து

### ஸ்லோவாக்கியாவில் அறுவர் உயிரிழப்பு



(பிரட்டிஸ்லாவா)

ஸ்லோவாக்கியாவில் புகையிரதத்துடன் பேருந்து மோதி விபத்திற்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்

தலைநகர் பிரட்டிஸ்லாவாவிலிருந்து 80 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நோவ் சாம்கி நகரில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இந்த விபத்தில் பலர் காயமடைந்துள்ள நிலையில், அவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் பேருந்தில் 9 பேரும், புகையிரதத்தில் 200 பேர் வரையிலும் பயணித்துள்ளனர்.

அதேநேரம் உயிரிழந்தவர்கள் அனைவரும் பேருந்தில் பயணித்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.(நி-6)

## ஜோ பைடனுக்கும்-டொனால்ட் ட்ரம்புக்குமான முதல்நாள் விவாதம் நிறைவு

(வோஷிங்டன்)


அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் இடையேயான முதல்நாள் விவாதம் நிறைவடைந்துள்ளது.

ஜோர்ஜியா தலைநகர் அட் லாண்டாவில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஜோ பைடனும், டொனால்ட் ட்ரம்பும் நேருக்கு நேர் சந்தித்து விவாதித்தனர்.

இந்த விவாதத்தில் அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

ஜனாதிபதி ஜோ பைடனுக்கும், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் வெளியுறவுக் கொள்கை, பொருளாதாரம் மற் றும் கருக்கலைப்பு சட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டிருந்தன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பொருளாதார பிரச்சனையை மையமாக கொண்டு இந்த விவாதம் நடைபெற்றது.



இந்த விவாதத்தின் போது தான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைபட்டியலிட்டு ஜோ பைடனும், டொனால்ட் ட்ரம்பும் வாக்காளர்களிடம் ஆதரவு கேட்டனர். தங்களின் செயற்பாடுகள் எப்படி இருக்கும்? என்பது குறித்தும் விளக்கமளித்தனர்.

இதில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் அமெரிக்க பொருளாதாரம் மற்றும் அவரது வெளியுறவுக் கொள்கை பதிவுக்காக ஜோ பைடனை பலமுறைதாக்கி விவாதித்துள்ளார்.

மொத்தம் 90 நிமிடம் விவாதம் நடத்தப்பட்ட இந்த விவாதத்தில் கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தக்கூடாது உள்ளிட்ட பல விதி முறைகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இந்தோனேஷியா- ரஷ்யா இடையே மீண்டும் நேரடி விமான சேவை



(ஜகார்த்தா)

இந்தோனேஷியா - ரஷ்யா இடையேயான நேரடி விமானம் மீண்டும் இயக்கப்படும் என இந்தோனேஷிய சுற்றுலாத் துறை அமைச்சர் சந்தியாகா யூனோ தெரிவித்துள்ளார்.

எனினும், நேரடி விமானங்களை இயக்குவதற்கு ரஷ்யா சில நிபந்தனைகளை விதித்துள்ளது.

இதுகுறித்து இரு நாடுகள் இடையே பேச்சுவார்த்தகள் நடைபெற்று வருவதாகவும், அந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்ததன் பின்னர், இருநாடுகளுக்கிடையேயான நேரடி விமானம் மீண்டும் இயக்கப்படும் என இந்தோனேஷிய சுற்றுலாத் துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

அதன்படி, சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு இந்தோனேஷியா அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்தவகையில் இந்தோனேஷ்யாவின் சுற்றுலாத்துறை வருமானத்தில் ரஷ்யா முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் டெங்கு தாக்கம் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

**(கொழும்பு) — நிலவும் மழை நிலைமை காரணமாக டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவற்றுள் கொழும்பு நகர்ப்பகுதியிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, குருநாகல், காலி போன்ற பிரதேசங்கள் டெங்கு பரவும் பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிலருக்கு எந்த அறிகுறிகளும் காணப்படுவதில்லை எனவும், மேலும் சிலருக்கு டெங்கு தொற்று ஒரு சாதாரண வைரஸ் தொற்றாகக் காணப்படுகிறது எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும், இந்த நாட்களில் சிறு பிள்ளைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது அவசியமானது எனவும், சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இருவருக்குமே காய்ச்சல் இருந்தால், அவர்கள் ஆரம்பம் முதலே ஓய்வில் இருக்க வேண்டும் எனவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 380 | 320 | 200-300 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 150 | 150 | 200 |
| தக்காளி | 700 | 700 | 700 | 550 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 150 | 100-120 | 200 |
| கோவா | 100 | 300 | 250 | 250 | 350 |
| கரட் | 450 | 550 | 650 | 400 | 600 |
| பூசணி | 160 | -- | 150 | 130 | 200 |
| புடோல் | 150 | 300 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 150 | 200 | 140 | 120-160 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 400 | 300-550 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 1200 | 700 | 1200 | 1000 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 250 | 180 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 150-250 | 300 |
| லீக்ஸ் | 550 | 650 | 700 | 400 | 600 |
| பீற்றூட் | 800 | 600 | 600 | 500 | 800 |
| கறிமிளகாய் | 600 | 800 | 700 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 2000 | 2200 | 1200 | 1000-1400 | 1200 |
| போஞ்சி | 750 | 700 | 600 | 450 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | 120 | 60-80 | 80 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1200 | 700-1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 500 | 400 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 140 | 200 | 200 | 300 | 350 |
| பொன்னாங்காணி | 60 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 160 | 120 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 167



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## மூட நம்பிக்கைகள்

"இன்றைக்கு யார் முகத்தில் முழித்தேனோ தெரியவில்லை. பார்கின்றவர்கள் எல்லாம் என்மேல் எரிந்து விழுகிறார்கள்" என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் பலபேர் உண்டு. பார்க்கின்றவர்கள் எல்லாம் எரிந்து விழுகின்றார்கள் என்றால் முழித்த முகத்திலே என்ன கோளாறு என யோசிப்பதை விட உங்கள் முகத்தில்லே அல்லது மனதிலே என்ன கோளாறு என்று யோசிப்பது நல்லது.

ஒரு பையன் ஒரு பரீட்சையை எழுதினான். தோல்வி அடைந்து போனான். என்ன காரணம் என்று விசாரித்தார்கள் வழக்கமாக நான் எழுதுகின்ற அந்த பச்சைக் கலர் பேனா அன்றைக்கு தொலைந்து போய் விட்டது சார். வேறு ஒரு பேனாவால் எழுதும் நிலை ஆகிவிட்டது . அது தான் புள்ளி முடிவு வேறு மாதிரி ஆகிவிட்டது என்றான். பேனாவின் கலரினை பார்த்தா புள்ளி போடுகிறார்கள் என்று கேட்டால் அப்படி இல்லை சார். எனக்கு அந்த பேனா தான் ராசியான பேனா என்றான். ராசியான கலர், ராசியான வீடு, ராசியான சைக்கிள் இது எல்லாம் உண்மை என்றா நினைக்கின்றீர்கள்.

மனோதத்துவ நிபுணர்கள் அது எல்லாம் அர்த்தமில்லாத விடயம், மூட நம்பிக்கை என்கிறார்கள் . ஒரு தடவை, இரண்டு தடவை பச்சைக்கலர் பேனாவால் எழுதி வெற்றி அடைந்து விட்டான். உடனே வெற்றிக்கு பச்சகைக்கலருக்கும் சம்மந்தம் இருக்கிறது என்ற எண்ணம். அவன் மனதுக்குள்ளே கொஞ்சம் கொஞ்சமாக வேர் விட ஆரம்பிக்கின்றது அவ்வளவு தான். மூடநம்பிக்கை அவன் மூளைக்குள்ளே போய் உட்காருகின்றது.

மனோத்தத்துவ நிபுணர்கள் இதையெல்லாம் கூட சோதனைகள் மூலமாக நிரூபித்துள்ளார்கள். BF.Skinner என்று ஒருத்தர் Superstition Experiment செய்த முதல் மனிதன் இவராகத் தான் இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். அவர் என்ன செய்தார். சில புறாக்கனை தனித்தனியாக கூண்டுக்குள்ளே அடைத்தார். 15 நிமிடங்களிற்கு ஒரு தடவை அதற்கு சில தானியங்களை ஆகாரமாகக் கொடுத்தார். அதன் பின்பு பார்த்தால் 15 நிமிடத்துக்கு ஒரு தடவை அந்தப் புறாக்கள் எல்லாம் விசித்திரமாக நடந்து கொள்ள ஆரம்பித்தது. ஒரு புறா தலையை மேலும் கீழுமாக ஆட்டியது. ஒன்று கூண்டுக்குள்ளேயே அப்படியும் இப்படியுமாக சுத்தியது. ஒன்று கழுத்தை ஒரு மூலை பக்கமாக நீட்டியது. 15 நிமிடத்துக்கு ஒரு தடவை தீனி தவறாமல் போட்டுக் கொண்டிருந்தார். இருந்தாலும் அந்தப் புறா எல்லாம் அந்த நேரம் பார்த்து ஒவ்வொரு விதமாக நடந்து கொள்ள ஆரம்பித்தது. அதெல்லாம் Superstitious ஆகியது. அதாவது மூட நம்பிக்கைக்கு ஆளாகியது. இது எப்படி என்று Skinner விளக்கம் கொடுக்கின்றார்.

முதல் தடவையாக தீனி போடுகின்ற போது தற்செயலாக அந்தப் புறா ஏதாவது செய்து கொண்டிருக்கிறதல்லவா. உதாரணமாக ஒரு புறா தீனி வருகின்ற நேரத்திலே தற் செயலாக தலையை மேலும் கீழுமாக ஆட்டிக்கொண்டிருந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு மூன்று தடவை தீனி வருகின்ற நேரமும் இதே மாதிரி செய்து கொண்டிருந்தால் அதன் பின் இந்தப்பழக்கம் உறுதியாகின்றது. ஒரு கட்டத்திலே என்ன ஆகின்றது என்றால் தலையை ஆட்டினால் தீனி வரும் என்று அந்தப் புறா நம்ப ஆரம்பிக்கின்றது அவ்வளவும் தான்.

"Superstitious behaviour is the product of Coincidental reward" என்கிறார் அந்த ஆராய்ச்சியாளர். இன்னொரு விடயம் என்னவென்றால் மூட நம்பிக்கைக்கு சான்றுகளை மட்டும் தான் மனிதன் தேட முயற்ச்சி செய்கின்றான்.

ஒரு நாள் ஒரு நபரின் முகத்தில் முழித்து அன்றைக்கு ஏதாவது ஒரு கெடுதல் வந்து விட்டது என்றால் அதன் பின் அந்த நபரைப் பார்க்கும் போது எல்லாம் என்ன கெடுதல் நடந்ததோ அதைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்கின்றான். அன்றைக்கு ஏதாவது நல்லது நடந்தால் கூட அதை நினைத்தப் பார்ப்பதில்லை.

ஒரு விமான விபத்திலே தப்பித்தவர்கள் சில பேரை பேட்டி எடுத்தபோது நாங்கள் செய்த பிரார்த்தனை தான் எங்களை காப்பற்றியது என்று சொல்கிறார்கள். அதே விபத்திலே இறந்து போனவர்கள் கூட கடைசிக் கட்டத்திலே பிரார்த்தனை செய்திருப்பார்கள் ஆனால் அதை சொல்வதற்கு அவர்கள் உயிரோடு இல்லை. அதனால் நிரூபிக்கிறது கஷ்டமாக போய்விட்டது. இப்படியெல்லாம் சொல்வதனாலே எல்லாம் மூடநம்பிக்கை என்று சொல்வதாக யாரும் நினைத்துவிட வேண்டாம். பல நல்ல நம்பிக்கைகளைக் கூட சரியான நிரூபனம் இல்லாததால் மூட நம்பிக்கை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். அது வேறு விடயம். இது வேறு விடயம். இது இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம்.

இந்த ராசி பார்க்கின்ற விடயத்தை சில பேர் சாமர்த்தியமாகக் கூடப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு கணவன் தன் மனைவியைப் பார்த்து தினமும் காலையில் உன் முகத்தில் முழித்து விட்டேன் என்றால் அன்று முழுவதும் நல்ல விதமாக நடக்கிறது என்று சொல்லிவிட்டார். அந்த மனிதனை தனியாக அழைத்த வந்து ஏன் சார் நீங்கள் அப்படி சொல்வது நிஜம் தானா என்று கேட்டார். அட நீங்கள் வேற சார் அப்படி சொன்னல் தான் காலையிலே எழுந்து தேநீர் போட்டு கொண்டு என் முன்னல் வந்து முகத்தை காட்டுகிறாள் இல்லை என்றால் அவள் எழும்புவதற்கு எட்டு மணிக்கு மேல் ஆகிவிடும். நான் அவளுக்கு தேநீர் போட்டுக் கொடுப்பது போல் ஆகிவிடும் என்றார். மிகவும் புத்திசாலியான ஆள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாடுகளை ஏமாற்றலாம்

## தாய்மாரின் கண்ணீரை ஏமாற்ற முடியாது

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்



(மன்னார்)

சர்வதேச நாடுகளை ஏமாற்றலாம். ஆனால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் தாய் மாரின் கண்ணீரையும், அவர்களின் துயரங்களையும் நீங்கள் ஏமாற்றி வெற்றி பெறமுடியாது.

இக் கண்ணீருக்கு இன்று இல்லை என்றோ ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப் படங்களையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உங்களிடம் ஒப்படைத்த, குடும்பம் குடும்பமாக சரணடைந்த, வெள்ளை வான்களில் வந்து கடத்திச் சென்ற உறவுகளையே கேட்கின்றோம். யுத்தத்தில் இறந்து போன உறவுகளை கேட்கவில்லை. பாதிக்கப்பட்ட எங்களை ஏமாற்றுவதற்காக புதிது புதிதாக ஆணைக் குழுக்களை கொண்டு வரவேண்டாம். மற்றைய நாடுகளை ஏமாற்றுங்கள்.

அம்மாக்களின் கண்ணீரையும், அவர்களின் துயரங்களையும் நீங்கள் ஏமாற்றி வெற்றி பெற முடியாது.

இக்கண்ணீருக்கு இன்று இல்லை என்றோ ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் கண்ணீர் மல்க தெரிவித்தனர். (நி-6-285)

## நில அபகரிப்பாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை

(மன்னார்)

மன்னாரில் கனிய மண் அகழ்விற்காக நிலத்தை இழந்தவர்கள் மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவ் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கனிய மண் அகழ்விற்காக உள்ளூர் காணி முகவர்கள் மூலம் சட்ட விரோதமான முறையில் காணி அபகரிக் கப்படுவதாக பல்வேறு விதமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த மோசடிக் கும்பலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய வேலைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

ஆகவே நில அபகரிப்பாளர்களுக்கு அஞ்சாமல் முன்வருமாறு தங்களுக்கு வேண்டுகோள்விடுக்கின்றோம். எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-285)

## சங்கிலி அறுப்பு தருமபுரத்தில் சம்பவம்

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் கண்டாவளை பிரதேச செயலகம் செல்லும் வழியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணை பின் தொடர்ந்து சென்ற இரண்டு சந்தேக நபர்கள் பெண்ணை தள்ளிவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கீழே விழுந்த பெண் ,சிறு காயங்களுக்கு உள்ளானார். ரூபாய் 2 இலட்சம் பெறுமதியான தங்கச் சங்கிலியே பறிபோயுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-316)

## அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. இவ் உற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஸ்ரீ பழனிவேல் பவனி நிகழ்வும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும். 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவ சாந்தி நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (நி-6-30)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3154

### நந்து




### கஜவதனன்




### கஜீவன்




### அபிநாஷ்




### பிரவீன்




### பிரசாந்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெய[illegible] facebook [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 520



தங்களைப் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தியிருக்கிறார்கள் என்ற செய்தி பரவ வேண்டியதுதான். சோழ நாட்டு மக்கள் எல்லோரும் திரண்டு எழுந்து வந்துவிடுவார்கள். தங்களுடைய அருமைத் தாய்நாடு ஒரு பயங்கர ரணகளமாகிவிடும். அது நல்லதா என்று எண்ணிப் பாருங்கள்! அப்படிப்பட்ட கேடு சோழ நாட்டுக்கு ஏற்படக் கூடாது என்றுதான் கடவுளே அந்தச் சுழற் காற்றை ஏவி விட்டிருக்க வேண்டும். கடவுளின் விருப்பத்துக்கு விரோதமாகத் தாங்கள் சோழ நாட்டில் கலவரத்தை உண்டாக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டான் வந்தியத்தேவன்.

அவ்வளவு நேரமும் அவன் சொல்லி வந்த வாதங்களுக்குள் இது இளவரசரின் மனத்தை ஓரளவு மாற்றியது. தம்மைப் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிந்தால், சோழ நாட்டில் கலவரம் உண்டாவது சாத்தியந்தான். மக்களுக்குத் தம்மிடம் உள்ள அபிமானம் எவ்வளவு மகத்தானது என்பது அவருக்கு ஒருவாறு தெரிந்துதானிருந்தது. ஆகையால் இளவரசர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, "அப்படியே உன் விருப்பத்தை நிறைவேற்ற நான் முடிவு செய்தாலும் அது எப்படிச் சாத்தியம்? கோடிக்கரையில் பழுவேட்டரையர்களின் ஆட்கள் எனக்காகக் காத்துக் கொண்டிருக்க மாட்டார்களா?" என்று கேட்டார்.

"அதற்கு உதவி செய்ய இந்த ஓடக்காரப் பெண் இருக்கிறாள். கரையில் எத்தனை பேர் காத்திருந்தாலும் அவர்கள் கண்களில் படாமல் கோடிக்கரைக் காட்டுக்குள் நம்மைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவாள். பூங்குழலி! நான் கூறியது காதில் விழுந்ததா? அவ்விதம் செய்ய முடியுமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

பூங்குழலி அப்போது ஏழாவது சொர்க்கலோகத்தில் இருந்தாள். இளவரசரைக் கடலிலிருந்து காப்பாற்றிப் படகிலேற்றி அழைத்துக் கொண்டு வந்தது அவளுக்கு எல்லையில்லாத உள்ளக் களிப்பை அளித்திருந்தது. கோடிக்கரை சேர்ந்ததும் அவரைப் பிரியவேண்டுமே என்ற எண்ணம் இடையிடையே வந்து துன்புறுத்திக் கொண்டிருந்தது. மேலும் அவருக்கு எந்த விதத்திலாவது உதவி செய்ய முடியுமானால் அதைக் காட்டிலும் அவள் பெறக்கூடிய பேறு வேறு என்ன இருக்க முடியும்?

"கோடிக்கரைக்குக் கொஞ்சம் மேற்கே தள்ளிப் படகைக் கொண்டுபோனால் இருபுறமும் காடு அடர்ந்த கால்வாய் ஒன்று இருக்கிறது. அதன் வழியாகப் படகை விட்டுக் கொண்டு போகலாம். இருபுறமும் அங்கே சதுப்புநிலம். சுலபமாக யாரும் வரமுடியாது!" என்று பூங்குழலி சொன்னாள்.

"எங்களை அங்கே விட்டு விட்டு நீ கோடிக்கரை போய்த் தகவல் விசாரித்துக் கொண்டு வர முடியும் அல்லவா?"

"முடியும் படகை ஒருவரும் பார்க்கமுடியாதபடி நிறுத்துவதற்கு எத்தனையோ இடம் இருக்கிறது."

"இளவரசே! கேட்டீர்களா!" என்றான் வந்தியத்தேவன்.

"கேட்டேன், அப்பா! என்னுடைய தாய் நாட்டில் என்னைத் திருடனைப் போல் பிரவேசிக்கச் சொல்லுகிறாய். திருடனைப்போல் ஒளிந்திருக்கச் சொல்லுகிறாய்." என்றார்.

படகில் சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. பிறகு இளவரசர், "சமுத்திரகுமாரி! ஏன் படகை அடியோடு நிறுத்தி விட்டாய்?" என்று கேட்டார்.

பூங்குழலி வந்தியத்தேவனைப் பார்த்து விட்டுத் துடுப்பை வலிக்க ஆரம்பித்தாள்.

"பாவம்! இந்தப் பெண் எத்தனை நேரம் தனியாகத் துடுப்பு வலிப்பாள்? நான் கொஞ்சம் தள்ளிப் பார்க்கிறேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பொய்சாட்சி சொல்லக் கூடாது

(நேற்றைய தொடர்ச்சி)

பீர்பால் அதே துணியைக் கழுத்தில் தொங்க விட்டுக்கொண்டு இப்போது இது என்ன? என்றார்.

அது "கழுத்துக்குட்டை அல்லது சவுக்கம்" என்றார் அக்பர்.

பீர்பால் கழுத்துத் துணியை எடுத்து இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொண்டார். இப்போது இது என்ன துணி" என்றார் பீர்பால்.

இப்போது அது லுங்கி அல்லது வேஷ்டி என்று கூறலாம் என கூறினார்.



பீர்பால் அக்பரை நோக்கிப் பணிவான குரலில் மன்னர் பெருமானே! என் கையில் இருக்கும் இந்தத் துண்டுத் துணியைப் பற்றி உங்களால் ஒரே மாதிரியான கருத்தைக் கூற முடியவில்லை.

கண்களால் இதனை நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, ஒரு பொருளைப் பற்றிப் பலவிதமான கருத்துக்களைக் கூறினீர்கள்.

ஒரு குருடனின் நிலையும் இதுதானே. தனக்கு பார்வை யில்லாத காரணத்தால், ஒரு பொருளைப் பற்றித் தெளிவான கருத்தை அவனால் கூற முடியவில்லை. இப்போது தங்கள் நிலையும் அதுவாகத்தானே இருக்கிறது.?

பார்வையுள்ளவர்கள் என்று கர்வப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் என்னையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். கண் இருந்தும் குருடர்களாத்தான் இருக்கிறோம்

இந்தக் கண்ணோட்டப்படி பார்த்தால், குருடர்களைவிடக் கண் பார்வையுள்ள குருடர்களின் தொகை மிகவும் அதிகம் என்று நாம் கருதலாமல்லவா?" என்று கூறினார்.

ஆழ்ந்த சிந்தனை வளத்துடன் கூடிய, உண்மைகள் நிறைந்த பீர்பாலின் அந்தச் சொற்களைக் கேட்டு, மிகவும் பாராட்டினார் அக்பர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயல்க. உண்மையிருக்க மட்டுமே உழைத்திடுக. – ஹேராம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாவட்ட அரச அதிபர்களின் மேற்பார்வை அவசியம்

யாழ்ப்பாண மாவட்டத்துக்கும் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் புதிய அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டச் செயலகம் என்பது அந்த மாவட்டம் முழுமைக்குமான அரச நிர்வாகத்தை கட்டிக் காக்கின்ற அமைப்பாகும்.

எனவே மாவட்ட செயலகங்கள் உச்சமான செயற்றிறனை வெளிப்படுத்துமாயின், அந்த மாவட்டத்தின் அரச நிர்வாகம் மிக உன்னதமான சேவையை மக்களுக்கு வழங்கும்.

அந்த வகையில், மாவட்டச் செயலகத்தின் உச்சமான செயற்றிறன் என்பது அந்தந்த மாவட்ட அரச அதிபர்களின் கைகளில் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

இதை நாம் கூறும்போது, ஒவ்வொரு திணைக்களத்தினதும் உச்சமான செயற்பாடு என்பது அந்தந்த திணைக்களத்தின் தலைவர்களின் கைகளில் உள்ளதென்பது இங்கு கவனத்துக்குரியது.

அதாவது மாவட்டச் செயலகத்தின் நிர்வாகம் என்பது எங்ஙனம் மாவட்டச் செயலாளரின் கையில் உள்ளதோ, அதுபோல பிரதேச செயலகங்களின் செயற்றிறன் அந்தந்தப் பிரதேச செயலர்களின் கைகளில் உள்ளது.

பிரதேச செயலர் தனது அலுவலகத்தில் இருக்கத் தவறும்போது, அங்கு தலைமைப் பொறுப்பு இல்லாது போகின்றது. இங்குதான் கேலிக்கூத்தான நிர்வாகம் ஆரம்பமாகின்றது.

இதேபோன்றுதான் ஏனைய திணைக்களங்கள், சபைகள் மற்றும் பாடசாலைகள் என அனைத்தும் அந்தந்த திணைக்களத் தலைவர்கள், முகாமையாளர்கள், அதிபர்களின் கைகளில் உள்ளதென்பது இங்கு கவனத்துக்குரியது.

இதை நாம் கூறும்போது மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களை நேர்த்தியான மேற்பார்வைக்கு உட்படுத்துமாயின் பொதுமக்களின் 75 வீதமான அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும்.

இருந்தும் இன்னமும் மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களின் பணி தொடர்பில் பொருத்தமான ஆய்வுகளைச் செய்யவில்லை என்பது தெரிகிறது.

உண்மையில் எங்கள் தமிழர் பிரதேசத்தில் இருக்கக்கூடிய கணிசமான பிரதேச செயலகங்களில் பொதுமக்கள் அவமானப்படுத்தப்படுகின்றனர்.

அதிலும் ஏழைச் சனங்களாயின் நிலைமை சொல்லிமாளா.

உண்மை. கணிசமான பிரதேச செயலர்களுக்கு பொதுமக்களுடன் கதைக்கவே தெரிவதில்லை. தங்களின் பதவியை அவர்கள் தங்கள் முப்பாட்டனின் முதுசம் என நினைக்கிறார்கள்.

இவ்வாறு பிரதேச செயலர்கள் தூக்கி எறிந்து கதைக்கும்போது அவர்களுக்கு ஒத்தூதும் இதர அதிகாரிகளும் பொதுமக்களை ஏளனப்படுத்துகின்றனர். எனவே இந்த மனநிலை மாற வேண்டும்.

ஆகவே மக்களை அன்போடும் இன்சொல்லோடும் வரவேற்க வேண்டும். இந்த சுமூகமான சூழலை நம் அரச அதிபர்கள் ஏற்படுத்துவார்களாயின், அவர்களின் சேவை மகேசன் சேவையாகப் போற்றப்படும்.

இதேவேளை மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற மனநிலையோடு இருக்கக்கூடிய பிரதேச செயலர்களும் அதிகாரிகளும் நம் மத்தியில் உள்ளனர் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

# நிறுத்தப்பட்ட ஜப்பானிய திட்டங்கள் இலங்கையில் மீள ஆரம்பிக்கப்படும்

## இலங்கைக்கான ஜப்பான் தூதுவர்

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள இலங்கை, பாதியில் நிறுத்தப்பட்ட ஜப்பானிய திட்டங்களை இலங்கையில் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதற்கு இலங்கை தனது பாராட்டுக்களை தெரிவித்ததாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு ஜப்பான் தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் எனவும் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை மீளப் பெறுவதற்கும் இது ஒரு முக்கியமான மைல்கல் என்றும் அவர் கூறினார்

மேலும் இலங்கையின் கடன் நெருக்கடியை தீர்க்க ஜப்பான் தன்னால் இயன்ற உதவிகளை செய்து வருகிறது என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானவுடன், இந்த நாட்டில் ஜப்பானிய திட்டங்களை மீண்டும் தொடங்குவதற்கான நிதியைப் பயன்படுத்துவதை விரைவுபடுத்த முயற்சிப்பதோடு நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஜப்பான் இலங்கையை முழுமையாக ஆதரிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ம-7,10)

## கடன் மறுசீரமைப்பு முறைமையால்

# நாட்டிற்கு நன்மை கிட்டும் என்றால் மட்டுமே ஆதரவு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு செயல்முறை நாட்டிற்கு நன்மை பயக்கும் என்றால், அதற்கு ஆதரவை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளதாவது IMF திட்டம் மற்றும் கடன் மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. கடன் மறுசீரமைப்பு செயல்முறை நாட்டிற்கு நன்மை பயக்கும் என்றால், அதற்கு ஆதரவை வழங்குவோம். எனினும் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

2028 வரை கடனை செலுத்துவதற்கு கால அவகாசம் விதிக்கப்பட்டுள்ளது. 2028 முதல் கடன் தவணைகளைச் செலுத்த வேண்டும். இது ஒரு நல்ல விடயம் போல் தெரிந்தாலும், IMF இன் 2023 மார்ச் அறிக்கை கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின்படி, நாம் 2033 முதலே கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

IMF அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த இணக்கப்பாட்டு கலந்துரையாடலினால் 2033 இலக்கை எட்ட முடியாது போயுள்ளது. மேலும், சகல நாடுகளையும் விட எமது நாடு கடன் மறுசீரமைப்புச் செயல்முறையை வேகமாக பூர்த்தி செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

செயல்முறையை முழுமைப்படுத்தாமல் இவ்வாறு மக்களிடம் பொய் சொல்வது தவறாகும். எம்மை விட வேகமாக தங்கள் கடன் மறுசீரமைப்புச் செயல்முறையை முழுமையாக மறுகட்டமைத்த பல நாடுகள் உள்ளன.

எமது நாட்டில் வட்டி குறைப்புக்கான இணக்கப்பாடு எட்டப்படவில்லை. வட்டியையும் கந்துவட்டியையும் செலுத்த வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது.

ஒரு நாடாக நாம் ஒரு முழுமையான இணக்கப்பாட்டை எட்டவில்லை. சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்கள் அடங்கலாக சர்வதேச வணிகக்கடன் தரப்பினரோடு இதுவரை எந்த நிலையான இணக்கப்பாடுகளையும் எட்டவில்லை என்றார்.

(ம-7,10)

### அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு

## மாதாந்த கொடுப்பனவு ரூ. 10 ஆயிரத்தால் உயர்வு

அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த நிறைவேற்று கொடுப்பனவை 10,000 ரூபாவால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக, 15,000 ரூபாவாக காணப்பட்ட கொடுப்பனவு 25,000 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் புதிய திருத்தம் நடைமுறைக்கு வரும் என குறிப்பிட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ம-7,10)

## போதைவஸ்துக்களுடன் ஒரே நாளில் 781 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது மாத்திரம் போதைப்பொருட்களுடன் 20 பெண்களும் 761 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 23 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 15 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10)

## பொலிஸ் உத்தியோகத்தர் விபரீத முடிவெடுத்து மரணம்

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஹக்மனை, பொத்தேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய தங்காலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் கடமையில் இருக்கும் போது தான் சுகவீனமுற்று இருப்பதாகக் கூறி கடமைகளை முடித்துவிட்டு தனது வீட்டுக்குச் சென்றுள்ளதாகவும்,

வீட்டில் வைத்து தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் நீண்டகாலமாகத் தனது மனைவியுடன் முரண்பாட்டில் ஈடுபட்டிருந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹக்மனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## மாங்குளத்தில் விபத்து ஒருவர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம், ஏ9 வீதியில், கனரக வாகனம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்திற்குள்ளானதில், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் – ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

05

### பங்களாதேஷ் இனப்படுகொலை (Bangladesh genocide)-1971

வங்காளதேச இனப்படுகொலை என்பது வங்காளதேச விடுதலைப் போரின் போது கிழக்கு பாகிஸ்தானில் (இப்போது வங்காளதேசம்) வசித்த வங்காள இந்துக்களின் இனச் சுத்திகரிப்பு ஆகும், இது பாகிஸ்தான் ஆயுதப்படைகள் மற்றும் ரசாக்கர்களால் (ரசாகர் என்பது கிழக்கு பாகிஸ்தானிய துணை இராணுவப் படையாகும், இது அப்போதைய கிழக்கு பாகிஸ்தானில் ஜெனரல் டிக்கா கானால் ஏற்பாடு செய்யப்பட்டது.) நடத்தப்பட்டது.

இது 25 மார்ச் 1971 இல் தொடங்கியது, கிழக்கு பாகிஸ்தானின் பெங்காலி மக்களை இராணுவ ரீதியாக அடக்குவதற்காக மேற்கு பாகிஸ்தானால் (இப்போது பாகிஸ்தான்) ஆபரேஷன் சர்ச்லைட் தொடங்கப்பட்டது வங்காளிகள் மக்கள்தொகை அடிப்படையில் பெரும்பான்மையானவர்கள் மற்றும் பாகிஸ்தானிய அரசிடமிருந்து சுதந்திரம் கோரி வந்தனர்.

வங்காள சுயநிர்ணய இயக்கத்தைக் குறைக்க முற்பட்ட பாக்கிஸ்தானிய ஜனாதிபதி யாஹ்யா கான் பெரிய அளவிலான இராணுவப் பணியமர்த்தலுக்கு ஒப்புதல் அளித்தார், மேலும் ஒன்பது மாத கால மோதலில் பாகிஸ்தானிய வீரர்கள் மற்றும் உள்ளூர் பாக்கிஸ்தான் சார்பு போராளிகள் 300,000 முதல் 3,000,000 வங்காளிகளைக் கொன்றனர். 200,000 முதல் 400,000 பெங்காலி பெண்கள் வெகுஜன படுகொலை மற்றும் இனப்படுகொலை பாலியல் வன்முறையின் திட்டமிட்ட பிரசாரத்தில் கற்பழிக்கப்பட்டனர்.

இனப்படுகொலை பற்றிய அவர்களின் விசாரணையில், ஜெனிவாவை தளமாகக் கொண்ட சர்வதேச நீதிபதிகள் ஆணையம், பாகிஸ்தானின் பிரசாரம் நாட்டின் இந்து மக்களில் கணிசமான பகுதியை அழிக்க அல்லது வலுக்கட்டாயமாக அகற்றும் முயற்சியை உள்ளடக்கியது என்று முடிவு செய்தது.

கிழக்கு பாகிஸ்தானில் பாரபட்சமான சட்டத்தை நடைமுறைப்படுத்திய மேற்கு பாகிஸ்தானிய அரசாங்கம், முக்தி பாஹினி (வங்காள எதிர்ப்புப் போராளிகள்) கிளர்ச்சியின் பின்னணியில் இந்துக்கள் இருப்பதாகவும், உள்ளூர் "இந்து பிரச்சினையை" தீர்ப்பது மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் என்று கானின் அரசாங்கமும் பாகிஸ்தானியரும் வலியுறுத்தின. இவ்வாறு ஒடுக்குமுறையை ஒரு மூலோபாய கொள்கையாக மேற்கு பாக்கிஸ்தானிய உயரடுக்கு கருதியது.

கிராமப்புறங்களில், பாகிஸ்தான் இராணுவம் கிராமங்கள் வழியாக நகர்ந்து, இந்துக்கள் வாழ்ந்த இடங்களை தெரிந்தெடுத்து எரித்தனர்.

விருத்தசேதனத்தை சரிபார்ப்பதன் மூலமோ அல்லது முஸ்லீம் பிரார்த்தனைகளை கூறுவதன் மூலமோ இந்துக்கள் அடையாளம் காணப்பட்டனர். இதன் விளைவாக சுமார் எட்டு மில்லியன் கிழக்கு பாகிஸ்தானிய அகதிகள் இந்தியாவிற்குள் குடியேறினர். அவர்களில் 80-90% இந்துக்கள்.

பங்களாதேஷ் விடுதலைப் போரின் போது பாகிஸ்தானின் நடவடிக்கைகள் முக்தி பாஹினிக்கு ஆதரவாக இந்தியாவின் இராணுவத் தலையீட்டிற்கு ஊக்கியாக செயற்பட்டன, இது 1971 இன் இந்திய-பாகிஸ்தான் போரைத் தூண்டியது. மோதலும் இனப்படு கொலையும் முறையாக 16 டிசம்பர் 1971 அன்று முடிவுக்கு வந்தது.

### வங்காளதேச விடுதலைப் போர் 1971

வங்காளதேச விடுதலைப் போர் 1971 இல் மேற்கு பாகிஸ்தானுக்கும் கிழக்கு பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கும் இடையில் நடந்தது. இப்போரில் இந்தியாவும் முக்தி பாஹினியும் (வங்காளதேச விடுதலை இராணுவம்) வென்று வங்காளதேசம் உருவாக்கப்பட்டது. மொத்தத்தில் 90,000 போர் கைதிகள் சரணடைந்தனர்.

இப்போர் நடைபெறும்பொழுது இந்திய இராணுவமும் சோவியத் ஒன்றியமும் முக்தி பாஹினிக்கு நிதியுதவி செய்தன. இதே நேரத்தில் ஐக்கிய அமெரிக்காவும் சீனாவும் பாகிஸ்தானுக்கு உதவி செய்தன. இதனால் டிசம்பரில் பாகிஸ்தான் இந்தியா மீது செங்கிஸ் கான் நடவடிக்கை அதாவது தாக்குதல் மேற்கொண்டது. இந்திரா காந்தி போர் நிலையை கூறி இந்திய இராணுவம் கிழக்குப் பாகிஸ்தான் மீது படையெடுத்தது.

13 நாட்களிலேயே போர் முடிந்து இந்தியாவும் முக்தி பாஹினியும் வெற்றி பெற்றன. டிசம்பர் 16ஆம் திகதி பாகிஸ்தான் தளபதி நியாசி சரணடைந்தார். வங்காளதேச மக்கள் விடுதலையை கொண்டாடினர். சுதந்திரத்தின் பின், வங்காளதேசம் அவாமி லீகால் ஆளப்பட்டது. தேர்தல் நடத்தப்படாமல் முஜிப் பிரதமராக ஆனார்.

### ஜனநாயக வழியில் பங்களாதேஷ்

நவீன ஆட்சி முறைகளில் ஜனநாயகம் மிகவும் பிரபல்யமானது. ஜனநாயகம் என்பது "மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சி" என்று ஐக்கிய அமெரிக்காவின் 16ஆம் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் வரைவிலக்கணப்படுத்தினார். "அனைவருக்கும் உரிமைகள் கிடைக்கும் ஓர் ஆட்சி முறை" என்று சீலர் எனும் அரசியல் அறிஞர் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துகிறார். புராதன கிரேக்கத்தில் எதென்ஸ், ஸ்பாட்டா முதலிய நகர அரசுகளில் நேரடி ஜனநாயகம் நிலவியது. அங்கு ஒன்று கூடிய பிரஜைகள் ஆட்சி நிர்வாகம் தொடர்பான முடிவுகளை எடுத்தனர். அதாவது நேரடி ஜனநாயகம் என்பது மக்கள் எல்லோரும் ஒன்று கூடி முடிவெடுப்பதாகும்.

வாக்குரிமை உள்ள பிரஜைகள் ஆட்சி நடவடிக்கைகளுக்காகத் தமது பிரதிநிதிகளைத் தேர்தல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்தல் பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனப்படும். தற்போது உலகின் பெரும்பாலான நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சியே மேற்கொள்ளப்படுகின்றது. சனத்தொகை அதிகரித்தமை, மனித தேவைகள் அதிகரித்தமை முதலிய காரணங்களால் நேரடி ஜனநாயகத்தை செயற்படுத்துவதும் முடியாத காரியமாக போய்விட்டது. அதற்குப் பதிலாக பிரதிநிதித்துவ ஜனநாயகம் இன்று நடைமுறைப் படுத்தப்படுகின்றது

ஜனநாயகம் வெற்றியளிப்பதற்கான அடிப்படைக் காரணிகள் இரண்டு, ஒன்று சுதந்திரம் மற்றது சமத்துவம். அனைவரும் சமூகத்தில் கௌரவமாக வாழ்வதற்கான உரிமையைப் பெற்றிருத்தல் சுதந்திரமாகும். பிரஜைகள் அனைத்து அடிப்படை உரிமைகளையும் அனுபவிப்பதற்கு சமூகத்தில் சமத்துவம் நிலவ வேண்டும் என்பது இரண்டாவதாகும். ஜனநாயகத்தின் வெற்றிக்கான காரணிகள் சர்வசன வாக்குரிமை. காலத்துக்குக் காலம் தேர்தல் நடைபெறுதல். அரசியல் அறிவு படைத்த மக்கள் அரசியல் கட்சிகள் காணப்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அரசியல் கட்சிகள் பற்றி பார்ப்போமானால் ஒரு நாட்டில் இரண்டுக்கும் அதிகமான கட்சிகள் காணப்படுமாயின் அது பல கட்சி முறையாகும். ஜேர்மனி, இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியா, இலங்கை முதலிய ஆசிய நாடுகளிலும் பல கட்சி முறையே காணப்படுகின்றது. நாட்டு மக்கள் ஆட்சி நடைமுறையில் நிறுவனங்களுக்கான பிரதிநிதிகளை தேர்தலினூடாக தேர்ந்தெடுப்பதன் மூலம் நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளோடு இணைந்து கொள்கின்றனர்.

பொதுமக்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற, இறுதியாக பொதுமக்கள் வசம் அதிகாரம் சென்றடைகின்ற ஆட்சி முறையொன்றாக சனநாயக ஆட்சி முறை ஏற்றுக்கொள்ளப்படுவதனால், பொதுமக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு எடுத்துக்கொள்வது எவ்வாறென்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

பொதுமக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆட்சி அமைப்பும், அதற்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறையும் ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமான அந்நாட்டின் அரசியல் அமைப்பிலும் தேர்தல் நியதிச்சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஒரு நாட்டின் தேர்தல்முறை அந்நாட்டின் வரலாற்று, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளோடு பிணைந்த பல்வேறு காரணிகளின் அழுத்தம் காரணமாக உருவானதும் தேர்தல்முறை மக்களின் தேவைகளுக்கேற்ப அடிக்கடி திருத்தங்களுக்குள்ளானதுமான ஒரு முறையென அழைக்க முடியும். காலனித்துவ நாடுகளாகக் காணப்பட்ட உலகின் பெரும்பாலான நாடுகள் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், அமைத்துக் கொண்ட தமது நாடுகளுக்கான ஆட்சிமுறைமைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைமைகள், காலனித்துவ ஆட்சியாளர்களின் தாய்நாடுகளில் பின்பற்றப்பட்ட முறைகளைப் பெரிதும் ஒத்த முறைகளில் அமைப்பதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அத்தகைய நாடுகளின் வரலாற்றுத் தகவல்களைப் பரிசீலிக்கின்ற போது தெளிவாகின்ற ஒரு விடயமாகும்.

"பிரதிநிதித்துவம்" தொடர்பான கோட்பாடு நிகழ்காலத்தில் பல்வேறு விதங்களில் பொருள் கோடல் செய்யப்படுகின்றது.

சட்டவாக்கச் சபையொன்றிற்கு ஏதேனுமொரு தேர்தல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதி அத்தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறப்படுவதால் இங்கு நிகழ்கின்ற பிரதிநிதித்துவமுறை "அபிலாசைப்பிரதிநிதித்துவம்" என அழைக்கப்படுகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்பு தீண்டிய...

என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவ தினமன்று காலை வீட்டின் நிலப் பகுதியை துப்புரவு செய்து கொண்டிருந்தவேளை பனை ஓலைக்குள் மறைந்திருந்த பாம்பு தீண்டியதாகவும், சம்பவ இடத்திலேயே குறித்த தாய் உயிரிழந்ததாகவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## நோயாளி...

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடையாளம் காணப்பட்ட நபர் வெளிநாட்டைச் சேர்ந்த ஆண் ஒருவராவார்.

பிசிஆர் பரிசோதனையில் இன்ப்ளூயன்சா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பறவைக் காய்ச்சல், ஏவியன் இன்ப்ளூயன்ஸா என்றும் அழைக்கப்படுகிறது. இது மனிதர்களைப் பாதிக்கக்கூடிய ஒரு வகை இன்ப்ளூயன்ஸா வைரஸால் ஏற்படுகிறது. அவற்றில் ஒரு விகாரம் H5N1 ஆகும். (ம-7,10)

## பெண்ணின்...

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கோவில்குளம் பகுதியில் வீதியால் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்ற இருவர் அவரது சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது ஒரு பவுண் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,250)

## யாழில் வன்...

துள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நடந்த பல்வேறு வன்முறைச் சம்பவங்கள், கடைகள் எரிப்பு சம்பவங்களுடன் தொடர்புடைய 24 வயதான சந்தேக நபர் உடுவில் பகுதியில் யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து கார், மோட்டார் சைக்கிள், தயாரிக்கப்பட்ட கைக்குண்டு, வாள்கள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று சந்தேக நபர் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டபோது சந்தேக நபரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

வெளிநாட்டில் உள்ள நபரொருவர் மூலம் பணம் பெற்று வன்முறையில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த வன்முறை கும்பலைச் சேர்ந்த மேலும் ஐவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,10,33)

## சீனத் துணை...

சீன வெளியுறவுத் துணை அமைச்சர் சன் வெய்டாங்கை, பெய்ஜிங்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

2014ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது ஜனாதிபதி ஷி ஜின்பிங் இலங்கைக்கு மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க விஜயத்தை நினைவுகூர்ந்த பிரதி வெளிவிவகார அமைச்சர், அவரை சீனாவின் பழைய நண்பர் என்று அழைத்தார். (ம-7,10)

## இலங்கை...

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவிச் செயலாளர் ரொபர்ட் கப்ரோத்தின் இலங்கைக்கான விஜயம் குறித்து அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவிச் செயலாளர் ரொபர்ட் கப்ரோத் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ரொபர்ட், அரச அதிகாரிகள், நிதித் துறை சார்ந்த அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ரொபர்ட் கப்ரோத்தின் விஜயம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நட்புறவையும் ஆதரவையும் எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு பொருளாதாரம், நிதித் துறைகளில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல் மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் ஆழமான சீர்திருத் தங்கள் இன்றியமையாததாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## யுத்தத்தில்...

அரசியல் களத்திலும் வரலாற்று வெற்றியை அவர் பதிவு செய்வார் என்று தான் நம்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் "இராணுவத் தளபதி நாட்டுக்கு வழங்கிய வாக்குறுதி" என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு, தாமரைத் தடாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த ஜனாதிபதி மேலும் குறிப்பிடுகையில்,

பீல்ட் மார்ஷல் பொன் சேகா வழங்கிய வாக்குறுதிக் கமைய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்று 3 தசாப்த கால யுத்தத்தை நிறைவு செய்தார். அதன் காரணமாகவே அவர் பீல்ட் மார்ஷலாக தரமுயர்த்தப்பட்டார். இலங்கையில் பீல்ட் மார்ஷலாக செயற்பட்ட ஒரேயொரு இராணுவத் தளபதி அவர் மாத்திரமே.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டிய தேவை காணப்பட்டது. அதற்காக அங்கு இராணுவத்தின் ஒரு முழுமையான படையணி கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. ஆனால் நான் சரத் பொன்சேகாவையே நியமித்தேன். காரணம் பொன்சேகா என்ற ஒரு நபர் ஒரு படையணிக்கு சமமானவர் என்பதால் ஆகும்.

யுத்தக் களத்தைப் போன்று அரசியலிலும் பல்வேறு போராட்டங்களை எதிர்கொண்டுள்ளார். சவால்களையும் சந்தித்துள்ளார். அரசியலில் வெற்றியும் பெற்றுள்ளார். அதே போன்று எதிர்காலத்திலும் அவர் நிச்சயம் வெற்றியைப் பதவி செய்வார். எனவே அவரது சேவை இராணுவத் தளபதியாவோ, பாராளுமன்ற உறுப்பினராகவோ நின்றுவிடப் போவதில்லை. நாட்டுக்கு சேவை செய்வதற்காக இன்னும் வாய்ப்புக்கள் உள்ளன என்று நான் நம்புகின்றேன் என்றார். (ம-7,10)

## இனந்தெரியாத...

தினரையும் அச்சுறுத்தும் வகையிலான திட்டமிட்ட செயல் என்பதை, கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகியுள்ள காணொளிக் காட்சிகள் உறுதிப்படுத்துகின்றன. (ம-7,10,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2024.06.28
சீட்டிழுப்பு இலக்கம் 5518
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 8 9 3 2 1 0
அத சம்பத W 3 2 1 0
சீட்டிழுப்பு இலக்கம் 0093

தன நிதானய
திகதி - 2024.06.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1548
P 08 21 28 46 P
Double Chance 26106

மெகா பவர்
திகதி 28/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1866
H 23 18 27 45 50
00787

லக்கி 7 VIP
திகதி 2024.06.28
சீட்டிழுப்பு இலக்கம் 0344
S 1 0 7 0 5 3 S

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3760
சீட்டிழுப்பு திகதி 28.06.2024
T 09 10 11 48
T 17754

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.28
சீட்டிழுப்பு இலக்கம் 0827
மீனம் 02 07 09 53 மீனம்
21

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.06.2024 வெற்றி வாரம் 226
ஆங்கில எழுத்து B மற்றும் வெற்றி இலக்கம் 6 8 7 8 7 4
59839
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,545,472.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2492 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 28.06.2024 தினம் வெள்ளி
03 15 52 75 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,835,120.80

சனிதா
திகதி 2024.06.28 வெற்றி வாரம் 4653
04 13 24 31 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,446,698.80
243624 637499

சசிரி
வெற்றி வாரம் 495
சீட்டிழுப்பு திகதி 2024.06.28 பச்சை
26 49 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,488,160/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4204 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.28 தினம் வெள்ளிக்கிழமை
06 07 12 38 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,879,815.60
892386

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 05 32 35 58 65
1668 இள கபில 28.06.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 530,145,431.00

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2318
சீட்டிழுப்பு திகதி : 2024.06.28
16 34 38 51 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 123,618,200.00
778515


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 17 37 684
(0111)

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0695)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0695)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0695)


# ஜனாதிபதி தேர்தலை நடத்தும் அதிகாரம் எதிர்வரும் மூன்று வாரங்களில் தேர்தல்கள் ஆணைக்குழு வசம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் எதிர்வரும் மூன்று வாரங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்க உள்ளது.

ஜூலை மாதம் 17ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட ஆணைக் குழுவுக்கு அதிகாரம் கிடைக்கும்.

அதன் பிரகாரம் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் ஒரு நாளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் வகையில் ஜூலை மாதம் 17ஆம் திகதி முதல் அதாவது இன்னும் மூன்று வாரங்களின் பின் ஆயத்தப் பணிகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்ததாவது,

தேர்தல் கடமைகளுக்காக அரச ஊழியர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கோருமாறு மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளோம்.

வாக்குச் சாவடிகளாகப் பயன்படுத்தப்படும் இடங்களை ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, வாக்காளர்களின் விரல் நகங்களில் அழியாதமை பயன்படுத்துவது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், எந்த வகையான மை பயன்படுத்த வேண்டும் மற்றும் அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து ஆணைக்குழு இன்னும் முடிவு செய்யவில்லை என தெரிவித்துள்ளார். (ம-7.10)


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 265/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 280/= | (Max)3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg சம்பா | - 230/= | |
| 01 Ocean மீன் ரின் | - 395/= | ~~500/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 729/= | ~~780/=~~ |
| 500ml விம் Liquid | - 310/= | ~~375/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3500/= | ~~3900/=~~ |
| 400g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 01 கற்பூர பெட்டி | - 250/= | ~~340/=~~ |
| 180ml Chik சம்போ | - 360/= | ~~480/=~~ |
| 1 Fortune சோயா | - 100/= | ~~165/=~~ |
| 500g மலிபன் சொக்லட் கிறீம் பிஸ்கட் | - 470/= | ~~560/=~~ |
| 750g சுபோசா மா | - 560/= | ~~590/=~~ |

Max 01
400g Anchor
1015/=

~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(0119)
Happy Supermarket
0777 8080 30

KBK கந்தர்மடம் Northern Uni அருகில்
A/L பிரத்தியேக வகுப்பு | கணக்கீடு A/L 2026, 2025
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் ஆரம்பம்
01.07.2024 திங்கள் 04.30 Pm
(C-0694)
உங்களுக்கு பொருத்தமான நேரத்தில் மாலை நேர இரவு நேர வெளி மாணவர்களுக்கான Zoom வகுப்புகளும் நடைபெறுகின்றது.
வடக்கின் முதற்தர கணக்கீட்டு ஆசிரியர்
MR. BALAKAJEN SLTS
B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)
Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl
✆ - 077 4520 043


## நாட்டை...

ணிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற 'ஜனாதிபதி சுற்றாடல் விருது' வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை தற்போது முதல் படியை எடுத்துள்ளது. அதன்படி, நாங்கள் திவால் நிலையில் இருந்து வருகிறோம். இப்போது பொருளாதார மாற்றச் சட்டத்தை ஏற்று அந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-7.10)

# மரண அறிவித்தல்

## தம்பையா பாலசுப்பிரமணியம்

(ஓய்வுநிலை உத்தியோகத்தர் – இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில்)



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் பழந்தோட்டம், அளவெட்டி மேற்கு அளவெட்டியில் வசித்து வந்தவருமான தம்பையா பாலசுப்பிரமணியம் அவர்கள் 27.06.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருச்செவ்வேள் (இரசிகமணி கனக செந்தில்நாதன்), நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சத்தியதேவியின் அன்புக் கணவரும் தீபா (அவுஸ்திரேலியா), செந்தூரன் (அதிபர்- யாழ்.ஊறணி கனிஷ்ட வித்தியாலயம்), ஆரூரன் (இலங்கை போக்கு வரத்துச் சபை- காரைநகர்ச் சாலை), றூபா (அளவெட்டி), ஷோபா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினராசா (அவுஸ்திரேலியா), தர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சங்கானைப் பிரதேச செயலகம்), சாதனா (அளவெட்டி), டினேஷ் (சிவமஹால் சில்க்ஸ்- யாழ்ப்பாணம்), நாகரூபன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், சுவாதிகா, காவியா, சேயோன், தருண்ஜா, அபர்ணஜா, தனஞ்ஜயன், சாருஜா, அபிஷா, அம்பிகை, பிரணவன், சொரூபன் ஆகியோரின் பேரனாரும் காலஞ்சென்றவர்களான பழனிவேல், வெற்றிவேல், இராசம்மா, அருணாசலம், வள்ளிநாயகி, தெய்வநாயகி மற்றும் சிவசுப்பிரமணியம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (30.06.2024) பிற்பகல் 1.00 மணியளவில் அளவெட்டியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காகத் தெல்லிப்பழை றொட்டியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 282 2570
(C-0697)

தகவல் :
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
05.11.1956

மறைவு
31.05.2024

கடந்த 31.05.2024 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஆணிவேர்

## அமரர் கிட்டிணன் சற்குணம் (பச்சை)

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 30.06.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும், 01.07.2024 திங்கட்கிழமை எமது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்**

**எமது தந்தையை இழந்து நாம் துன்புற்ற வேளையில் எமக்கு ஆறுதலளித்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்**

(C-0692)

கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

தகவல் : குடும்பத்தினர்
076 543 5541, 077 153 0285

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org